Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

(C/797) Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 30 வெள்ளிக்கிழமை (15.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 289



உயரம், நீளம் பாய்தலில் சாதனை 06



ஒரு ஊழல் படமாகிறது 12




பொது மன்னிப்பு இல்லையாம் 08



அதிகமாக நீர் குடித்தால்... 11

# யாழ். குடா முழுவதும் மக்கள் நலத் திட்டங்கள்

## அமைச்சர் டக்ளஸ் வழிகாட்டலுடன் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் சிதைந்துபோன வடபகுதியைக் கட்டியெழுப்பும் அரசின் திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் பல்வேறு செயற்திட்டங்கள் நேற்று யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா, பவித்திரா வன்னியாராச்சி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட உயர்மட்ட அரச பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர்.

நேற்றையதினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளுடன் மேற்படி செயற்திட்ட தொடக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதலில் தெல்லிப்பளைச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையத்திற்கும் கடைத்தொகுதிக்குமான அடிக்கற்கள் அமைச்சர்களால் நாட்டிவைக்கப்பட்டது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ் குடைசாய்ந்தது யாழ். பயணிகள் 16 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்துக்கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று நேற்று நண்பகல் ஒரு மணியளவில் ஈரற்பெரியகுளத்திற்கு அருகாமையில் அவுசதப்பிட்டிய என்னுமிடத்தில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் 16 பயணிகள் காயமடைந்தனர்.

இவர்களுக்கு வவுனியா மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் அனைவரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா பொலிஸார் விபத்து குறித்து விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

## முகாமைத்துவ உதவியாளர்களாக 430 பேருக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த 430 பேருக்கு விரைவில் அத்துறையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரட்ன தெரிவித்தார்.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பரீட்சையில் ஆயிரத்து 100 பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் 430 பேர் சித்தியடைந்தனர்.

இவ்வாறு சித்தியடைந்த 430 பேருக்கும் அரசதுறை நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார். அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் 430 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இதன் காரணமாகவே

(15 ஆம் பக்கம் பார்க்க)

### தரமற்ற பெற்றோல் விநியோகம்

## தீய சக்திகளின் சதி விமல் வீரவன்ச ஆவேசம்



(கொழும்பு)

துரோகிகளின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு உள்ளேயும் இவ்வாறான துரோகச் சக்திகள் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல் மற்றும் தரம் குறைந்த

(15 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் லண்டன் பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் அடுத்த வாரமளவில் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவே இவர்கள் லண்டன் செல்லவுள்ளனர்.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்கவுள்ளார்.



பக்திபூர்வமாக நேற்று நடைபெற்ற நயினை நாகபூஷணி அம்மன் தேர் வீதியுலாவில் பக்தர்கள் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திகடன்களை நிறைவு செய்தனர். (படம் - க.சதீஸ்)

# துரித அபிவிருத்தி மூலமாக வாழ்வை வளம்படுத்த உழைப்போம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியை போன்று வடபகுதியையும் அபிவிருத்தியால் உயர்த்தி எமது மக்களுக்கு வளமான வாழ்வை பெற்றுக் கொடுக்கவேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி எள்ளுக்காடு ஜமுனன் முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கல்விக்கு அத்திவாரமிடும் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதில் நாம் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றோம். கடந்தகாலபோர் எமது இளம் சமூகத்தினரில் பெரும்பாலானவர்களைப் பாதித்துள்ளது. எனவே அடுத்துவரும் சந்ததியினரையேனும் பாதுகாத்து ஆரோக்கியமான கல்விமான்களாக வளர்க்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. இதற்காகவே நாம் தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம். இதேவேளை போரினால் அழிவடைந்த எமது தேசத்தை கட்டியெழுப்பவேண்டிய அவசியமும் உள்ளது. நாட்டின போர் நடைபெறாத பகுதியோடு ஒப்பிடும் பொழுது எமது மாவட்டம் அபிவிருத்தியில் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இங்கு மக்களின் வாழ்வாதாரம் பொருளாதாரம் கல்வி மற்றும் அனைத்து துறைகளும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிப்படியாக கட்டியெழுப்பும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுவருகின்றோம் இதற்கு மக்களின் ஒத்துழைப்பு பூரணமாக கிடைக்கு மிடத்து மிக விரைவாக அவற்றை நிறைவு செய்யமுடியும் என அவர் மேலும தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர் மதிவதனியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறார்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர். இச்சிறார்களுக்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர சந்திரகுமார் பரிசில்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி, கோணாவில் அ.த.க.பாடசாலையின் அதிபர் இதயசிவதாஸ், உருத்திரபுரம் கிராம அலுவலர் சிம்சன்போல், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போடடியிடும் தில்லைவேல், இராமச்சந்திரன் உப்பட்ப் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சியில் புதிய கல்வி வலயம் கல்விச் சமூகத்தின் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய கல்வி வலயம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கல்வித்துறை சார்ந்தோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேற்படி மாவட்டத்தில் 100 வரையிலான பாடசாலைகள் இயங்கிவரும் நிலையில் இவ்வனைத்துப் பாடசாலைக்கும் ஒரே ஒரு கல்வி வலயமே உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட முல்லைத்தீவு கல்வி வலயம், துணுக்காய் கல்வி வலயம் என இரண்டு கல்வி வலயங்கள் இயங்கிவருகின்றன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் ஒரே ஒரு கல்வி வலயம் இயங்கிவருவதுடன் இலங்கையில் அதிக பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயமாக இது காணப்படுகிறது.

அக்கராயனை மையப்படுத்திப் பூநகரிப் பாடசாலைகளுக்கு வசதிகளை ஏற்படுத்தக்ககூடிய வகையில் புதிய கல்வி வலயம் ஒன்றை உருவாக்குமாறு கோரப்படுகிறது.

மேற்படி கல்விவலயம் பளை, கண்டாவளை, கரைச்சி, பூநகரி ஆகிய கல்விக் கோட்டங்களை உள்ளடக்கியதாக நெருக்கடியான நிலையில் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(121)

# விளையாட்டு மைதானம் விசமிகளால் சேதம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானம் விசமிகளால் சேதமாக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: ஆனைக்கோட்டை பொன்னையா வீதியில் அமைந்துள்ள லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் அப்பகுதி இளைஞர்கள் தினமும் விளையாடி வருவது வழமையாகும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவ்விளையாட்டுக் கழக மைதானப் பகுதியில் இரவு வேளை உடைந்த போத்தல் ஓடுகளும் குப்பைகளும் கொட்டப்பட்டு மைதானம் முழுமையாகப் பாவிக்க முடியாதவாறு சேதமாக்கப்பட்டுள்ளது. (26)

# போக்குவரத்து சேவை வேண்டும்; மாணவர்களின் சிரமம் நீங்குமா?



(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலை மடு அரசினர் தமிழ் கலைவன் பாடசாலைக்குப் பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு கல்விச் சமூகத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேற்படி பாடசாலைகக்கு 5 கிலோமீற்றர் தொலைவிலிருந்து குறிப்பாக கெருடமடு பகுதியிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வருகை தருகின்றனர்.

இம் மாணவர்கள் காலை தனியார் பேருந்தில் வருவதுடன் மாலை தனியார் பேருந்துக்காகப் பிற்பகல் 5 மணிவரை காத்திருந்து அதன் பின்னரே வீடு திரும்புகின்றனர்.

எனவே இம்மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# ஆலயம் புனரமைப்பு

(பூநகரி)

பூநகரி - கல்முனையில் அமைந்துள்ள புனித யூதாததேயு ஆலயம் விரைவில் மீள் நிர்மானம செய்யப்படவுள்ளது. கடந்த போர்ச் சூழல் காரணமாக இந்த ஆலயம், பக்தர்களின் வழிபாட்டிற்கு முற்றாகத் தடைவிதிக்கப் பட்டிருந்தது.

இப்போது 16 வருடங்களின் பின் இந்த வருடம் திருவிழா கொண்டாடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கினர் இதனையடுத்து பாஷையூர் பங்குத் தந்தை தலைமையில் அங்கு சென்ற ஆலய சொந்தக்காரர்கள் ஆலயம் முற்றாகச் சேதமடைந்திருந்ததை அடுத்து விழாக் கொண்டாடுவதுக்கு வசதியாக ஒரு சிறு குடிசை அமைத்தனர்.

தற்போது பூநகரிப் பங்குத் தந்தை அருட்திரு பிறாயன் தலைமையிலும், பிரபல சட்டத்தரணி மு.றெமிடியஸ் தலைமையிலும் ஆலய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு முழு வீச்சில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (21)

# சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சுகாதாரப் பணி உதவியாளர்களாகின்றனர்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் கீழ் உள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும நிறுவனங்களில் கடமையாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களைச் சுகாதாரப் பணி உதவியாளர்கள் என பெயர் மாற்றம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதார செயலகப் பணியாளர்கள் நாயகம் வைத்தியர் யூஎன்மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதி கோரி 06.01.2011 ஆம் திகதி அன்று நாடாளுமன்றத்திற்குப் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும் 17.06.2011 ஆம் திகதி இப்பெயர் மாற்றத்திற்கான அங்கீகாரம் நாடாளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக அவர் வெளியிட்ட சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்துவது குறித்த சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் சகல சுத்திகரிப்புத் தொழிலாளர்களினதும் பெயர் விபரங்களைத் தமக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு மத்திய அரசின் கீழ் தொழிற்படும் சகல வைத்தியசாலைகளையும் நிறுவனங்களையும் கேட்டுக் கொள்கிறார். (பா)

# தேர்தல் வன்செயல்கள் தொடர்ந்தும் முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக மேலும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த செவ்வாய்க கிழமை வரை யாழ்தேர்தல் முறைபபாட்டு மத்திய நிலையத்திற்கு 8 முறைப்பாடுகள் கிடைத்திருந்தமை தெரிந்ததே. நேற்று முன் தினம் புதன்கிழமை மேலும் ஐந்து முறைப்பாடுகள் யாழ்.தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்திற்கு கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இம் முறைப்பாடுகள் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டதுடன் முறைப்பாடுகளை இயன்றவரை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கும் படியும் அவர் குறித்த தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளைக கேட்டுக்கொண்டிருக்கின்றார்.(பா)

# தென்மராட்சியில் கரப்பந்தாட்டம் மோகனதாஸ் அணி வெற்றி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் படையினரின் ஏற்பாட்டில் 12 கழகங்கள் கலந்து கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் ஏ விளையாட்டுக் கழக அணியும் பி விளையாட்டுக்கழக அணியும் மோதியது.

5 செட் போட்டியில் 3:1 என்ற விகிதத்தில் மோகனதாஸ் ஏ அணி வெற்றிபெற்றுக் கொண்டது(11)

புதுக்கடைத் திறப்புவிழா

TOPAZ

இன்று 15.07.2011 (வெள்ளிக்கிழமை)

இல - 70, பெரியகடை, யாழ்ப்பாணத்தில்

மங்களகரமாக ஆரம்பிக்கின்றோம்.



சேட், ரவுசர், சல்வார், சிறுவர்களுக்கான சூட் வகைகள், முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் மற்றும் சாறி வகைகள்

என்பனவற்றைக் குறைந்த விலையில் மனம் நிறைவாகப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

(C/827)

கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளை இடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள் ஒன்றாகக் கூடிவாழ்தலே நமக்கு வேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை. கீழ்ப்படிதலே அதன் ரகசியம்.

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## செயல்; அதுவே சிறந்த செயல்!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதிலிருந்து அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது வரை, ஒற்றுமை குறித்து நம்மிடம் ஏராளம் பொன்மொழிகளும் முதுகதைகளும் உண்டு. ஒற்றுமையே பலம் என்பதையே எல்லாமும் வலியுறுத்துகின்றன.

எனவே ஒன்றுபட்டால் வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையை யாரிடமும் யார் வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்க முடிகிறது. கேட்கிறவர்களும் 'அது சரிதானே' என்பது போலத் தவிர்க்க முடியாமல் தலையாட்டிக் கொண்டிருக்கும் பரிதாபத்தையும் பார்க்க முடிகிறது.

ஆனால், நாம் அவசியம் கேட்டுக்கொள்ள வேண்டிய அடிப்படைக் கேள்வி, யார் வெல்வதற்கு ஒற்றுமை வேண்டும் என்கிறார்கள் என்பதும் ஒற்றுமையால் என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதுமாகும்.

தேர்தல் வரும்போதெல்லாம் ஒற்றுமையைச் சொல்லிக் கொண்டு வருகிறவர்கள், பிறகு சாதித்தது என்ன என்று தேடிப் பார்த்தால், தமிழ்மக்களின் வாழ்வழிப்பை மேலும் மேலும் தூண்டிவிட்டதாகத்தான் வரலாறு இருக்கிறது. ஏகப்பிரதிநிதித்துவமே எல்லாவற்றையும் வென்று தரும் என்று முழங்கி 22 எம்பிக்களை எடுத்து வைத்துக் கொண்டு மக்களை முள்ளிவாய்க்கால் வரை கொண்டுபோய் விட்டதுதானே நடந்தது?

அதன்பிறகும் இரண்டு வருடமாய் ஏகப்பிரதிநிதித்துவ ஒற்றுமையை மக்களிடம் கேட்டவர்கள் சாதித்தது என்னவென்று பார்த்தால், தங்களுக்குள்ளேயே பொதுச்சபையில் ஒருவர்மீது ஒருவர் போத்தல்களை வீசி எறிந்து ஒற்றுமையை வெளிக்காட்டியதும், ஒரு நகரசபையையே நடத்த முடியாமல், மக்களுக்குப் பணி செய்வதைப் புறக்கணித்து ஒற்றுமையாய் சபையை முடக்கி வைத்திருந்ததையும்தான் பார்த்தோம்.

அதுமட்டுமில்லை, தேர்தல் முடிந்த கையோடு அவர்களுக்குள் தொடங்கிவிடும் 'ஒற்றுமைச் சண்டையில்' மக்களை நினைக்கவே நேரமிருப்பதில்லை. மக்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டியதெல்லாம் அரசாங்கத்தின் கடமை, அடுத்த தேர்தலை அறிவித்தால் ஒன்றுபட்டு எங்களுக்கு வாக்குப் போட வேண்டியது மக்களின் கடமை என்பதாக இந்த 'வீரவசன' அரசியல் தொடர்கிறது.

கூட்டமைப்பைச் சேர்ந்ததா தமிழரசுக் கட்சி அல்லது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்ததா கூட்டமைப்பு என்ற கேள்விக்கே ஒற்றுமையாய்ப் பதில் கண்டுபிடிக்க முடியவில்லை இன்னும்! கூட்டமைப்பு என்பது ஒரு கட்சியா அல்லது தமிழரசுக் கட்சியின் நீட்சியா என்கிற அந்த ஒற்றுமையின் சூட்சுமப் புதிர், உள்ளிருக்கிறவர்களுக்கே இன்னும் பிடிபடுவதாயில்லை. இதற்குள், மக்கள் ஒன்றுபட்டுவிட்டால் எதையோ சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கையை வேறு தேர்தலுக்குத் தேர்தல் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது.

யோசித்துப் பார்த்தால், எந்தத் தேர்தலிலும் தமிழ்மக்கள் அனைவருமே ஒன்றுபட்டு முற்றுமுழுதாய் ஏகப்பிரதிநிதிகளைத் தேர்வு செய்யாததால்தான் அவர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தர முடியாமலே போய்க்கொண்டிருக்கிறது போலும். வாழ்விழந்து வதங்கியபடியே மக்கள் இன்னும் எத்தனை எத்தனை தேர்தல்களுக்குத்தான் ஏகப்பிரதிநிதித்துவம் வரவாக்களித்துக் கொண்டிருக்க வேண்டுமோ தெரியவில்லை.

சரி, அப்படியே ஒற்றுமையைக் காட்டிவிட்டால், அடுத்தது என்ன? யாரும் சிரிக்காமல் கேட்டுக்கொள்ள வேண்டிய விஷயம் இதுதான். ஆங்காங்கே அரசைப் பணிய வைக்கும் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் வெடிக்குமாம். சொல்வது யார்? 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது கைதானவுடன், அரசுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதி, எல்லாப் போராட்டத்தையும் கைவிட்டு வக்கீல் தொழிலுக்கு மீண்டவர்கள் சொல்கிறார்கள், போராட்டம் வெடிக்குமாம்!

உங்களால் முடியாததைச் சொல்லி ஏன் மக்களை ஏமாற்ற வேண்டும்? உண்மையில் போராடத் தயாரானவர்கள் ஆயின், அளவெட்டிக் கூட்டத்தில் உங்கள் பாதுகாப்புப் பொலிஸாருக்கு அடி விழுந்ததென்றால், அந்த அடிகளை நீங்களே முன்னால் சென்று வாங்கிக்கொண்டு, அந்த இடத்திலேயே சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பீர்களல்லவா?

உங்களையும் உங்கள் பஜிரோ வாகனங்களையும் கவனமாகப் பாதுகாத்துக்கொண்டு, அடுத்தநாள் படைத்தரப்பிடம் போய் இரகசியமாக சிரித்துச் சமரசம் செய்துகொண்டுவிட்டு, பிறகு எங்கிருந்து போராட்டத்தை வெடிக்க வைப்பது? எதற்கு இந்த வீரவசனங்கள்?

– ஆசிரியர்.

# நிரந்தரக் கட்டட வசதிகள் இன்றி துணுக்காயில் 3 பாடசாலைகள்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் கல்வி வலயத்திற் குட்பட்ட 3 பாடசாலைகள் நிரந்தரக் கட்டடமின்றி இயங்கி வருவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

இதில் அமைதிபுரம் பாடசாலை, பெரியபுளியங் குளம் பாடசாலை, பேராறு பாடசாலை ஆகிய 3 பாடசாலைகளும் நிரந்தரக் கட்டடம் இன்றிச் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகின் றன.

இப்பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்களை அமைப்பதற்கான உதவி நிறுவனங்களிடம் கோரியிருந்த நிலையில் அடுத்த ஆண்டிலேயே இப்பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான உதவிகளை வழங்க முடியும் என உதவி நிறுவனங்கள் உறுதியளித்துள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (121)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பண்புசார் சிகிச்சைமுறைச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு பண்புசார் சிகிச்சைமுறைக் கற்பித்தல் தொடர்பான கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வின் இறேனியஸ் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நடைபெறவுள்ள இச்செயலமர்வு இன்றும் நாளை மறுதினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இச் செயலமர்வில் வளவாளர்களாக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.சிவகுமார், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியை செல்வி.என்.ஜெயந்தி ஆகியோர் செயற்படவுள்ளனர்.

சிகிச்சை முறைக்கற்பித்தலுக்கு ஏற்ப, பாடக் குறிப்பினைத் தயாரிக்கும் பயிற்சி வழங்கப்படவிருப்பதால், கருத்தரங்கிற்கு வருகை தரும் ஆசிரியர்கள் தரம் ஒன்றிற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடக்குறிப்பு என்பனவற்றையும் கொண்டுவரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (06)

## யோகபுரம் மகா வித்தியாலயத்தில் மகிழ்ச்சியூட்டல் கற்பித்தல் நிகழ்வு

(அக்கராயன்)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள யோகபுரம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான மகிழ்ச்சியூட்டல் கற்பித்தல் செயற்பாடு நேற்று முன்தினம் அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இச் செயற்பாட்டில் மாணவர்கள் மாதிரிச் சந்தைச் செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைச் செயற்பாடுகளும் இடம்பெற்றன. (121)

# ஞானிமடம் பாடசாலையின் வைரவிழாவும் மலர் வெளியீடும்

(பூநகரி)

கிளி - ஞானிமடம் அ.த.க.பாடசாலையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வைரவிழா மலர் வெளியீடும் கடந்த 12 ஆம் திகதி பாடசாலை முதல்வர் திருமதி தவமலர் கனகசபை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசாவும், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட தபால் அத்தியட்சகரும் பழைய மாணவருமான கா.புஸ்ப்பநாதனும் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு முன்னதாக பிரதம விருந்தினர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும் மாலைசூட்டி தமிழ் இன்னிசைக்குழுவின் நடன நிகழ்வுடன் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரையை ஓய்வுபெற்ற யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் கா.குலசேகரம் நிகழ்த்தினார்.

இப்பாடசாலையின் பழைய மாணவரும், சுவிஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வாழ்பவருமான பொ. முருகவேள் அங்கிருந்து தொலைத்தொடர்பு மூலம் உரை நிகழ்த்தினார்.

வைரவிழா மலரை கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் வெளியீட்டு வைக்க முதற் பிரதியை முழங்காவில் ம.வி அதிபர் சு.கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார். மலர் ஆய்வுரையை ஆசிரியர் சி.விசுவாசம் நிகழ்த்தினார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உட்படப் பலரது கல்விச் சேவைகள் பாராட்டப்பட்டு பத்துக்கு மேற்பட்டோர் விழாக்குழுவினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (112)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் குடிநீருக்கான தட்டுபாடு நீங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் 24 மணிநேர குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். போதனாவைத்தியச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் யாழ். போதனாவைத்தியசாலையின் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் காரணமாக விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர் உட்பட அனைவரும் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கிவந்தனர்.

தற்சமயம் நீர்விநியோக பொறிமுறை சரி செய்யப் பட்டு 24 மணிநேரமும் நீர்விநியோகம் இடம் பெற்று வருவதாக அவ்வதிகாரி தெரிவித்தார்.(பா)

## வன்னேரிக்குளத்தில் வைத்தியர் இல்லை

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர்கள் எவரும் நியமிக்கப்படாததால், மருத்துவ சேவைகளைப் பெறமுடியாத நிலை உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையில் கடந்த 25 வருடங்களாகப் பணியாற்றி வந்த நிரந்தர மருத்துவர் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மாற்றலாகிச் சென்றிருந்தார்.

1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் மட்டும் 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில், இந்த மருத்துவமனையின் மூலம் பயன்பெற்றுவந்த ஜெயபுரம், ஆணைவிழுந்தான், வன்னேரிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1500 குடும்பங்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (121)

# காரைநகர் வேணன் அணைக்கட்டு திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

கடந்த இருபது வருடங்களாக எவ்வித புனரமைப்பு வேலைகளுமின்றி சேதமடைந்துள்ள காரை நகர் கிழக்கு வேணன் அணைக்கட்டு புனர்நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் ரஜனி கண்ணா தெரிவித்துள்ளார்.

இந்த அணைக்கட்டு 1.2 மீற்றர் உயரமும், 5 கிலோ மீற்றர் நீளமும் கொண்டது. காரைநகர் பிரதேசத்தில் மேலதிகமாகக் கிடைக்கும் மழைநீர் கடலுள் சேர்வதைத் தடுக்கும் முகமாக அமைக்கப்பட்ட இவ்வணைக்கட்டு கடந்த பல வருடங்களாகச சேதமடைந்துள்ளமையால் காரைநகரில் உள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகள் பலவும் உவர்நீராக மாறியுள்ளன. இதனால், குடிதண்ணீருக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையில் மக்களின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் வேணன் அணைக்கட்டு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (10)

# இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியா வழங்கிய மனிதாபிமான உதவிகளை மறந்துவிட முடியாது

## - வவுனியா அரச அதிபர் பி.எம்.எஸ். சாள்ஸ்

(வவுனியா)

இடம்பெயர்ந்த மக்கள் மெனிக் பாம் நிவாரண கிராமத்தில் இருந்த காலம் தொடக்கம் மீளக்குடியேறும் வரை இந்திய அரசு மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக் கைகளை நாம் மறந்துவிட முடியாது

இவ்வாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் பி. எம். எஸ். சாள்ஸ் கடந்த திங்கட்கிழமை மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த இந்திய துணை தூது வர்களை வரவேற்று உரைநிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நிவாரண கிராமத்தில் மக்கள் தங்கி யிருந்தபோது காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை அளிக்க இந்தியா தனியான வைத்தியசாலையினை நிறுவி சேவை செய்தது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற கூரைத் தகடு களையும், சீமேந்து வகைகளையும், விவசாய தேவைக்கு உபகரணங்களையும் வழங்கியது.

மேலும் இவ்வாறான உத விகளை வழங்க முன்வந் துள்ளது. அத்துடன் புதைந் துள்ள கண்ணிவெடிகளை அகற்ற இந்திய நிபுணர் கள் உதவி எங்களுக்கு கிடைத்திருந்தது ரயில் பாதைகளை புனரமைக் கும் வேலைத்திட்டத்திலும் அவர்களுடைய பங்கு முக் கியமானதாக அமைந் துள்ளது என்றார்



இந்திய துணைத்தூது வர்கள் விக்கிரம் மிஸ்ரி, யாழ் இந்திய அலுவலக துணைத்தூதுவர் கே. மகாலிங்கம் வவுனியா செயலகத்திற்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (39)

## உபபிரதேச செயலகம் அமைக்கக் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் உப பிரதேச செயலகம் ஒன்று இல்லா மையால் தேவைகளைப் பெற்றுக்கொள் வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்குவதாக அப்பிரதேசத்தில் மீளக் குடி யமர்ந்துள்ள மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, பல்லவராயன் கட்டு, அக்கராயன் ஆகிய பகுதிகளில் உப பிரதேசசெயலகம் அமைப்பதற்கான தீர்மானங்கள் எட்டப்பட்ட நிலையில் பல்ல வராயன் கட்டு மற்றும் அக்கராயன் பகுதி யில் புதிய செயலகம் ஒன்றை அமைப்ப தற்கான காணிகளும் அடையாளம் காணப் பட்டிருந்தன.

இதேவேளை இது தொடர்பாகமேற்படி பிரதேசத்தில் பிரதேச செயலகம் ஒன்று அமைக்கப்படுமானால் இப்பிரதேசத்தி லுள்ள நான்காயிரம் குடும்பங்கள் நன் மையடைவதுடன் பிரதேசமும் அபிவிருத்தி அடையும் என சுட்டிக்காட்டப்படுகிறது. (121)

## நெடுந்தீவு துறைமுகப்பகுதியை ஆழமாக்க டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு துறைமுகப் பகுதியை ஆழமாக்குவதற்கு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக் ளஸ்தேவானந்தா விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமைச்சரின் பெரும் முயற்சியாய் எடுத்துவரப் பட்ட வடதாரகை கப்பல் நெடுந்தீவு, குறிகட்டுவான் சேவையை மேற்கொள்ள முடியாது தொடர்ந்து கரையில் தவம் கிடக்கின்றது.

இதனை அடுத்து நெடுந்தீவு துறைமுக வாயிலை ஆழமாக்கி புனர்நிர்மாணம் செய்வதற்கு அமைச்சர் துரித நடவடிக் கையை மேற்கொண்டுள்ளார். (வி)

## துணுக்காய் வலய பாடசாலைகளுக்கு "யுனிசெப்" தளபாடங்கள் வழங்கல்

(துணுக்காய்)

துணுக்காய் வலயத்தில் உள்ள பாட சாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தளபாடங்கள் அனைத்தும் துணுக்காய் கல்வி வலயத்தில் ஒப் படைக்கப்பட்டு அந்தந்த பாடசாலைகள் தமக்கு தேவையான தளபாடங்களை எடுத்துச் செல்கின்றன.

துணுக்காய் கல்வி வலயத்தில் மிக வும் தூர இடங்களில் உள்ள பாடசாலை களான கற்சிலைமடு மற்றும் முத்தையன கட்டு பாடசாலைகளுக்கான தளபாடங் களை எடுத்துச் சென்று வழங்குவதில் இராணுவத்தினர் வாகனவசதிகளை வழங்கி உதவி புரிந்துள்ளனர். தூர இடங்களில் உள்ள பாடசாலைகள் இந்த தளபாடங்களை ஏற்றிச் செல்வதில் பெரு மளவு நிதியை வாகனச் செலவாக செலுத்தவேண்டி இருந்ததை அடுத்து பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு இணங்க இராணுவத்தினர் இந்த உதவி களை புரிந்துள்ளனர். (42)

## கற்சிலைமடு பாடசாலை விரைவில் மகாவித்தியாலயமாக தரமுயரும்

(கற்சிலைமடு)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் கோட் டத்தினுள் கச்சிலமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையினை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

1975 ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம் பிக்கப்பட்டது. இப் பாடசாலை மாணவர் கலைப்பிரிவில் மாவட்டத்தின் முதன்மை நிலையினை அடைந்துள்ளனர். மற்றும் இனைப்பாட விதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளினை் மாவட்ட நிலையில் மட்டும் அன்றி மகாண நிலையிலும் பெற்றுள்ளனர்.

கடந்த மகாண மட்ட போட்டியிலும் இரண்டு இடங்களினை பெற்றுக்கொண்ட துடன், மூன்று மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றும் சந்தர்ப்பத் தையும் பெற்றுள்ளனர். தமிழ் மொழி தினம், ஆங்கில தினம் மற்றும் கணித விஞ்ஞான போட்டிகளிலும் மாவட்டமட்ட நிலைகளைப் பெற்று மாகாண மட்டத்திற்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையின் பெறு பேறுகளினை அடிப்படையாகக் கொண்டு அ.த.க.பாடசாலையில் இருந்து மகாவித் தியாலயமாக தரம் உயர்த்த துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் நடவடிக் கைகளினை மேற்கொண்டுள்ளார். (42)

## துணுக்காய் வலய அதிபர்கள் கூட்டம்

(யாழ். நிருபர்)

துணுக்காய் கல்வி வலயப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தண்டுவான் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்துக்குட் பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் அனை வரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவேண்டுமென துணுக்காய் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் அறிவித்துள் ளார். (10

## நிலக்கடலைக்கு பெரும் மதிப்பு செய்கையாளர்கள் அதிக நன்மை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடு முத்தையன்கட்டு பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலை பயிர்ச்செய் கையினால் தாம் அதிக வருமானத்தை ஈட்டி யுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 2 வருடங்கள் நெருங்கும் நிலையில் இந்த மக்கள் நிலக்கடலை உற்பத்தியில் அதிக வருமாணத்தைப் பெற்றுள்ளனர்.

நிலக்கடலைக்கு ஏற்பட்டுள்ள மதிப்பின் காரணமாக நிலக்கடலையின் விலை பாரிய அளவு உயர்வடைந்துள்ளது. இதனால் நிலக் கடலை உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் அதிகளவு வருமானத்தை ஈட்டியுள்ளனர்.

வன்னிப்பகுதியில் இப்பகுதியில் விளை யும் நிலக்கடலைக்கு பெரும் மதிப்பு இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (101)

## மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பு

(அம்பலப்பொருமாள்)

மல்லாவி மத்தியகல்லூரியில் கடமை யாற்றி மாற்றலாகிச் சென்ற ஆசிரியர் களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கல் லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.


அதிபர் ஜேசுதானந்தர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துனுக்காய் வலயபிரதிக்கல்விப்பணிப்பாளர் விஜய பாலா மற்றும் வலய பாடசாலை அதிபர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(121)

## வேலணைப் பிரதேசசெயலகத்திற்கு இரு மாடிக் கட்டடம் அடிக்கல் நாட்டல்

(வேலணை)

வேலணைப் பிரதேசசெயலகத்திற்கு 50 மில்லியன் ரூபா செலவில் இருமாடி கொண்ட புதிய கட்டடமொன்று கட்டப்படவுள்ளது. இக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷா நாட்டிவைக்கவுள்ளார்.

வேலணைக்கு செல்லவுள்ள ஜனாதி பதிக்கு அதிக வரவேற்பு அளிப்பதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (05)






பூநகரி மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில் விருந்தினர்கள் அரங்கில் அமர்ந்திருப்பதையும், கலந்து கொண்ட மாணவர்களின் ஒருபகுதியினரையும் காணலாம். (112)

# மாணவர்களது ஆக்கத்திறனில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் அலென்ரின்



(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் மாணவர்களது ஆக்கத்திறன் வெளிப்பாட்டு முன்னேற்றங்களை இப்போது பரவலாகக் காணக்கூடியதாக உளளது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவரகள் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.வீதி ஞானக் குழந்தை இல்லம் முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் மாணவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரதும் ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் நல்ல வளர்ச்சி நிலை பெறவேண்டும். இத் திறன்களை அவர்கள் எமது சமூகத்தின் மேம்பாடு கருதி பயன்படுத்த வேண்டும். எமக்குக் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அனைத்தையும் உரியமுறையில் பயன்படுத்தி எமது சமூகத்தினதும் பிரதேசங்களினதும் முன்னேற்றத்திற்கு அனைவரும் உழைக்க முன்வர வேண்டும் என்றார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பரிசுப் பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அன்பளிப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சிறாம்பியடி முன்னாள் மாதர் சங்கத் தலைவி திருமதி மல்லிகா ஒய்வு பெற்ற ஆசிரியை தெ.இரத்தினகோபால் பெற்றோர்கள் பொதுமக்கள் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொணடனர்.

## ஒளிராத தெரு விளக்குகள்

ஈச்சமோட்டைப்பகுதி தெரு விளக்குகள் பல கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் ஒளிர்விடாமல் அணைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள பிரபலமான இந்து ஆலய கும்பாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேகம் நடைபெற்ற காலங்களிலும் இந்த தெரு விளககுகள் ஒளிராததால் இப்பகுதி மக்கள் மிகவும் மனவேதனை அடைந்துள்ளனர். (42)

# வடக்கில் கால்நடை உற்பத்தித்துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்கில் முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் மக்களின் மாற்றுப் பொருளாதாரத்திற்கு வழி செய்யும் வகையில் கால்நடை உற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான போதிய நிதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கவுள்ளார் என கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில், நேற்று முன்தினம் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் பாற்கிராமங்களை அமைத்தல், புதிய இன கால்நடைகள், பசளை உற்பத்தி, கோழி மற்றும் ஆடு வளர்ப்பு பண்ணைகளை நிர்மாணித்தல், பால் விநியோக முகவர் நிலையங்களை அமைத்தல் போன்ற பல நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலய 2011 உயர்தரமாணவர் ஒன்றுகூடலில் விருத்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும் அக்கராயன் மகாவித்தியாலய பழையமாணவனுமாகிய க.ரதிதரன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன் ஒருவருக்குப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (121)

# செயலட்டை செயற்திட்டம் சரியாகப் பேணப்படவில்லை

## விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா தெற்கு முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ஆர்.ஏ.ஒஸ் வெல்ட்டினால் பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்ட செயலட்டை செயற்திட்டம் தொடர்பிலான முறைப்பாட்டை ஆராய்வதற்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோஸப் ஸ்ராலின் வவுனியா மேல்நீதிமன்றில் செயலட்டை பற்றிய விசாரணை அறிக்கையை வெளியிடப் பணிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனுவின் பலனாகவே இந்த அறிக்கை வெளியானது.

செயலட்டை தொடர்பான கணக்கறிக்கைகள் சரியாகப் பேணப்படவில்லை எனவும் எந்தவொரு கணக்காய்வும் நடைபெறவில்லை என சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில் 80, 150 ரூபா செயலட்டையுடன் தொடர்பில்லாத விடயங்களில் செலவிடப்பட்டுள்ளதாகவும் 89, 117 ரூபா பண வைப்பு பற்றிய விவரங்கள் இல்லை எனவம் கூறப்பட்டுள்ளது.

செயலட்டை செயற்திட்டம், இலங்கையில் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக பேணிவந்த இலவச கல்விக் கொள்கைக்கு எதிரானது எனவும், பணம் அறவிடும் செயற்திட்டங்களை அரசாங்க பாடசாலைகளில் தடை செய்யும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறியுள்ளது எனவும் ஜோஸப் ஸ்ராலின் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

# கிளைக்குழுத் தேர்தல்

(பூநகரி)

பூநகரி ப.நோ.கூ. சங்க கிளைக குழுக்களுக்கான அங்கத் தவர் இடாப்புக்கள் கடந்த 30 ஆம் திகதியுடன் முடிவுபடுத்தப்பட்டு 20 கிளை நிலையங்களிலும் வாக்களிக்கத் தகுதியானோர் பட்டியல் இந்தவாரம் முதல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களாக நியமன உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வந்த பூநகரி ப.நோக.கூ.சங்க நிர்வாகத்தை மக்களிடம் கையளிக்கும்முகமாக ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி பொதுச்சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைக் குழுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது. மேற்படி தேர்தலில் புதிய, பழைய உறுப்பினர்களான 2190 பேர்வாக்களிக்கவுள்ளனர். (112)

# வாழ்வாதார உதவி

(கிளிநொச்சி)

வன்னியில் மீள்குடியேறியோருக்கு சேவா லங்கா நிறுவனத்தின் வாழ்வாதார உதவி வன்னியில் மீளக்குடியேறிய மக்களுக்கு உடனடி உணவு மற்றும் பாதுகாப்பு வாழ்வாதார உதவித் திட்டத்தை சேவா லங்கா நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக பளைப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான இந்த உதவித் திட்டம் காசுக்கான வேலைத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மீள்குடியேறிய பகுதிகளில் இனங் காணப்பட்ட வீதிகளை புனரமைத்தல், சிறு குளங்களையும் வாய்க்கால்களையும் ஆழபபடுத்துதல் போன்ற பல வேலைகள் கிராமங்களில் உள்ள மக்களின் மூலம் செய்யப்படுகின்றன.

# 30 மில்லியன் ரூபா செலவில் ஐயன்கண்குளம் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் துணுக்காய் ஐயங்கண்குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளாக முழுமையான புனரமைப்புக்கு உட்படாது இருந்த இக்குளம் தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இக்குளம் முழுமையாக புனரமைக்கப்பட்ட பின்னர் 200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (121)

# பூநகரி பிரதேச சபையின் தேர்தல் பிரசாரங்கள் தீவிரம்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபைத் தேர்தலில் மும்முனைப் போட்டி இடம் பெறுவதால் தேர்தல் களம் சூடு பிடித்த நிலையில் மூன்று கட்சி வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் குதித்துள்ளார்.

இத்தேர்தலில் பூநகரிப் பிரதேசசபைக்கு ஐக்கிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன போட்டியிடுகின்றது.

யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் இணைந்து தேர்தல் பிரசார நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இவர்களது தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் கடந்த வாரம் பூநகரி, முழங்காவில், அன்புபுரம், கிராஞ்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. (112)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(15.07.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 30 ஆம் நாள்.

இராகுகாலம் 10.30–12.00, சுபநேரம் 6.00–7.30,

நட்சத்திரம் பூராடம் மு.ப 9.52 வரை

திதி: பூரணை பி.ப 12.40 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் லாபம், திடீர் பயணம்.

**ரிஷபம:–** பணக் கஷ்டம், உடல் நலக்குறைவு, குடும்பத்தில் சலனம், தொழில் நஷ்டம், தெரு விபத்து.

**மிதுனம் :–** பண வரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் லாபம், திடீர் பயணம்.

**கடகம்:–** பணக் கஷ்டம், உடல்நலக் குறைவு, குடும்பத்தில் கவலை, தொழிலில் நஷ்டம், தெரு விபத்து.

**சிம்மம்:–** பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் சலனம், தொழில் விருத்தி, திடீர் பயணம்.

**கன்னி :–** பணக்கஷ்டம், உடல் சுகக்குறைவு, குடும்பத்தில் கவலை, தொழில் நட்டம், உறவினர் தொல்லை

**துலாம் :–** பண வரவு, தேக சுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி தொழில் லாபம், நண்பர் தொல்லை.

**விருச்சிகம்:–** பண வரவு, தேக சுகம், குடும்பத்தில் குதூகலம், தொழில் விருத்தி, நண்பர்கள் தொல்லை.

**தனுசு:–** பணக் கஷ்டம், உடல்சுகம் பாதிப்பு, குடும்பத்தில் கவலை, தொழில் நஷ்டம், நண்பர் கரைச்சல்.

**மகரம:–** தேக சுகக் குறைவு, வைத்தியச் செலவு, நண்பர் தொல்லை, குடும்பத்தில் கவலை, தெரு விபத்து.

**கும்பம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம் பணவரவு, நண்பர் வருகை, கடன் வசூல்.

**மீனம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் லாபம், திடீர் பயணம், தேக ஆரோக்கியம், பயம்.

விளையாட்டுச் செய்திகள்

### ரியூடரின் சிறப்பான துடுப்பாட்டம்

# இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் 57 ஓட்டங்களால் வென்றது சென். பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)


ரியூடரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்தின் வோர்க்விக் அணிக்கெதிரான போட்டியில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை சீனிகம விளையாட்டு நல்லுறவுக்கான நிறுவனம் நடாத்தும் 40 ஓவர்கள் கொண்ட முரளி வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டியிலேயே சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான இப்போட்டியில் இங்கிலாந்தின் மூன்று, அணிகளும், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் ஒரு அணியும் மற்றும் மாத்தளை இந்து சீனிகம கிரிக்கெட் அணியுடன் யாழ்ப்பாண சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதுகின்றன.

இப்போட்டிகள் கிக்கடுவ ஸ்ரீ சுமங்கலோர்ஜ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும், இங்கிலாந்தின் வோர்விக் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 40 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 61, ஜெகன் 31, மெறீஸ் 25, லிவிங்டன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நேயல் 40 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு ஆடிய வோர்விக் அணி 40 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வென் 36, ரெப் ரோன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபோட் 22 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



ரியூடர்

## அனுமதிக்கக்கூடாது

(சிட்னி)

வீரர்கள் நடுவரைத் தேர்ந்து எடுக்க அனுமதிக்கக்கூடாது. நடுவரை விமர்சித்தது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. இது தொடர்பாக இந்திய வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? இந்திய வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென நடுவர் டாரல் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

இதே நிலை தொடர்ந்த ஒவ்வொரு நாடுகளும் நடுவரை மாற்றிக்கொள்ள கோரும் என்றும் அதற்கு ஐ.சி.சி. அனுமதிக்குமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிக்கு ஆசிரியர்களிடம் விண்ணப்பம் கோரல்

இலங்கை கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ள ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளிற்கு வலயக் கல்விப் பணிமனைகளிற்கு ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலை ஆசிரியர்கள், சுயமாக விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து அதிபரூடாக வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தி அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 30-08-2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, கல்வியமைச்சு, (விளையாட்டுப்பிரிவு), இசுறுபாய ஸ்ரீ ஜெயவர்த்னபுர கோட்டை, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தேசிய மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் 27,28,29,30ஆம் திகதிகளில் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஒரு விண்ணப்பதாரி மூன்று தனி நிகழ்வுகளில் பங்குபற்றலாம். 25 வயதிற்கு மேற்பட்ட சகல ஆசியர்களும் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். போட்டிகள் தனிப் போட்டி, குழுப் போட்டிகளாக நடைபெறும். தனிப்போட்டிகளாக, 100 மீற்றர், 200 மீற்றர், 800 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், ஈட்டி யெறிதல், குண்டு போடுதல், தட்டெறிதல் என்பன நடைபெறும். 1500 மீற்றர் ஓட்டம், 25 - 30 வயதுடையவருக்கு மட்டும் நடைபெறும். குழுப் போட்டிகளாக 4X100, 4X400 அஞ்சல், கரப்பந்து (ஆண், பெண்) வலைபந்து (பெண்), மென்பந்து (ஆண்) என்பன நடைபெறும். (06)

## வடமாகாண பாடசாலைகள் மெய்வல்லுநர் முதலிடம் பிடித்தது அருணோதயக் கல்லூரி

(வவுனியா)


வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் வவுனியாவில் அண்மையில் நிறைவடைந்த விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்களைப் பெற்ற பாடசாலை என்ற சிறப்பை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுள்ளது.

இதில் 15 தங்கம், 13 வெள்ளி, மூன்று வெணகலம் என மொத்தமாக 30 இடங்களைப் பெற்று பாடசாலை வரலாற்றிலேயே சாதனை படைத்துள்ளது.

இதில் வ. சாத்வீனா (13 வயது), சி. குனவசினா (17 வயது), பால லவணன் (17 வயது), அ. பவித்திரா (19 வயது), இ. ஜந்சனா (19 வயது), சி. நந்தலாலன் (19 வயது), இ. காவேரி (21 வயது), ச. தனுஜா (21 வயது), சி. நிஷாந்தி (21 வயது), நா. ஜெனனி (21 வயது), ப. பிரியதர்சினி (21 வயது) மற்றும் குழுப் போட்டியான 21 வயதுப் பிரிவில் 4X100, 4X400 ஆகியோர் தங்கப் பதக்கங்களைப் பெற்று முதலிடத்தையும், கு. டிலங்சனா (வயது 17), இ. ஜஞ்சனா (19 வயது), செ. அனில்ராஜ் (19 வயது), ஆ. ஹெனாய் றொசான் (19 வயது), இ. காவேரி (21 வயது), ச. தனுஜா (21 வயது), நா. ஜெனனி (21 வயது), மற்றும் ஆண், பெண்களுக்கான குழுப் போட்டியான 4X100, 4X400 ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று இரண்டாமிடத்தையும்,

இ. நிருசன் (19 வயது), செ. அனில்ராஜ் (19 வயது), உ. அகிலன் 19 வயது) ஆகியோர் வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொடுத்தனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்களைப் பெற்ற பாடசாலை என்ற சிறப்பைப் பெற்றுக் கொடுத்த வீர, வீராங்கனைகளுக்கு பாடசாலைச் சமூகம், அளவெட்டி வாழ் மக்கள், மற்றும் பாடசாலை நலன்புரிச் சங்கம் உள்ளிட்ட பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவன் கணேசலிங்கம் டிலக்ஷன் மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார்.

13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தல் (சாதனை 1.45மீ) நீளம் பாய்தல் (சாதனை 4.84) ஆகிய போட்டிகளில் முதலாம் இடம் பெற்றதோடு சாதனையாளருக்கான தங்கப் பதக்கம் உட்பட மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார்.

பதக்கம் வென்ற மாணவனுக்கு பாடசாலை அதிபர் சு. சண்முகமார், உப அதிபர் இ. அருணகிரிவாசன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் வை. வசந்தி ஆகியோர் பாராட்டுத் தெரிவித்தனர். (10)




சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி




தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நிறைவடைந்த 15 வயதுப் பிரிவுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரர்கள், இரண்டாமிடத்தைப் பெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வீரர்கள் விளையாட்டு அதிகாரிகளுடன் நிற்பதனைக் காணலாம். (12)

## நிரோசன், மதூசனின் துல்லிய பந்து வீச்சில் சுருண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி

(யாழ்ப்பாணம்)

நிரோசன் மற்றும் மதூசனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 23 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இப்போட்டி நடைபெற்றது. முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 46 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிதரன் 39, ஆகாஸ் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந்தன் மற்றும் ஞானகாந் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 21 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரதீபன் 14, சசிதரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோசன் 28 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், மதூசன் 19 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்தனர். (42)

## சாவகச்சேரி இந்துவுடனான போட்டியில் 108 ஓட்டத்தால் வென்றது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

கிஷாந்துஜன் மற்றும் துவராகசீலன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 108 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



கிஷாந்துஜன்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே சென் ஜோன்ஸ் அணி வெற்றிபெற்றது. இப்போட்டி கடந்த 11ஆம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிஷாந்துஜன் 65, துவாரகசீலன் 57, சிந்துஜன் 24, லோகதீசன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜிந்தன் நான்கு, தனஞ்சயன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி, 45 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுசன் 27, தனஞ்சயன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கனுசன், கிஷாந்துஜன் தலா மூன்று, துவாரகசீலன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# கோபா அமெரிக்க கால்பந்து உருகுவே, சிலி அணிகள் தகுதி

(லா பிளாடா)

கோபா அமெரிக்கா கால் பந்து தொடரின் காலிறுதிக்கு உருகுவே, சிலி உள்ளிட்ட அணிகள் முன்னேறியுள்ளன.

அர்ஜென்டினாவில், ஆண்களுக்கான கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் பிரேசில், பராகுவே உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கின்றன. “சி” பிரிவு லீக் போட்டியில் உருகுவே, மெக்சிகோ அணிகள் மோதின.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய உருகுவே அணிக்கு, ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் அல்வரோ பெரைரா ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு மெக்சிகோ வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் உருகுவே அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் மூன்று லீக் போட்டிகளில் ஒரு வெற்றி, இரண்டு ‘டிரா’ உட்பட 5 புள்ளிகள் பெற்ற உருகுவே அணி, காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் உருகுவே அணி, அர்ஜென்டினாவை சந்திக்கவுள்ளது.

சி பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சிலி, பெரு அணிகள் மோதின. இதில் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் பெரு அணியின் ஆன்ட்ரி காரில்லோ, ‘சேம்சைடு கோல்’ அடிக்க, சிலி அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் மூன்று லீக் போட்டியில் இரண்டு வெற்றி, ஒரு டிரா உட்பட ஏழு புள்ளிகள் பெற்ற சிலி அணி, சி பிரிவில் முதலிடம் பிடித்து, காலிறுதிக்கு தகுதி பெற்றது.



இங்கிலாந்தின் அணித் தலைவராக இருந்த டேவிட் பெக்காம் றியல் மட்றிட் கழகத்தில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார். இது தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் அவர் விளக்கமளிப்பதனைக் காணலாம். இதில் கருத்துத் தெரிவித்த பெக்காம், தொடர்ந்தும் தேசிய அணியில் விளையாடுவதையே விரும்புவதாகவும், எதிர்வரும் உலகக் கிண்ண கால்பந்துத் தொடரில் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# ஊக்கமருந்து விவகாரத்தில் வீரர்களுக்கே கவனம் தேவை

(புதுடில்லி)

ஊக்கமருந்து விவகாரத்தில் விளையாட்டு வீரர்கள் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும். இதில் ஒருவர் சிக்கினால் அவரே அதற்கு முழுப் பொறுப்பு என்று இந்திய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு எச்சரித்துள்ளது. ஊக்கமருந்து விளையாட்டில் ஹீரோவாக இருக்கும் ஒரு வீரரை ஜீரோவாக மாற்றிவிடும். தடகள வீரர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களிடையே ஊக்கமருந்து குறித்த போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்திய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பும், சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு அமைப்பும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வீரர்கள் சிகிச்சை பெறும்போது அதுகுறித்து முழுமையாக தெரிந்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச கரப்பந்தாட்டப் பயிற்சி இலங்கையிலிருந்து மூவர் பங்கேற்பு



சர்வதேசக் கரப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச கரப்பந்தாட்ட பயிற்சியாளர்களுக்கான 3 கட்டங்களில் நடைபெற்ற பயிற்சி நெறி இம்முறை தாய்லாந்தில் கடந்த முதலாம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெற்றது. இதற்கு 18 நாடுகளில் இருந்து 2 கட்டங்களில் வெற்றிபெற்ற 25 பேர் பங்குபற்றியதுடன் இலங் கையிலிருந்து மட்டும் மூன்று பேர் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு கரப்பந்தாட்ட சம்பியன்களான பல்கேரியா, பிரான்ஸ், ஜப்பான், சீனா, ஸ்லோவேக்கியா, செக் குடியரசு, ஈரான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் பங்குபற்றின. இலங்கை கரப்பந்தாட்ட வரலாற்றில் இதற்கு முன் இவ்வாறான பயிற்சி நெறியில் சித்திபெற்றிருப்பது நான்கு பேர் மட்டுமே. திறமையாக இப்பயிற்சிநெறியில் சித்திபெற்ற மகேஷ், ஷன்ன மற்றும் தீபால் மூவரும் சான்றிதழ்களுடனும் கேடயங்களுடன் கடந்த 10ஆம் திகதி நாடு திரும்பினர்.

# ஸ்கொட்லாந்து அணியை வென்றது இலங்கை அணி

(எடின்பேர்க்)

இங்கிலாந்தில் நடைபெறும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை 183 ஓட்டங்களால் இலங்கை அணி வென்றது.

ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மஹேல ஜெயவர்தன 64 ஓட்டங்களையும் திமுத் கருணாரட்ன 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 32.4 ஓவர்களில் 101 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அவ்வணியின் சார்பில் ஆகக்கூடுதலாக மஹிட் ஹக் 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சாளர்களில் லஷித் மாலிங்க 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். தம்மிக பிரசாத் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, இலங்கை ஆகிய அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன. அயர்லாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. நேற்று ஸ்கொட்லாந்து அணியை அயர்லாந்து அணி 5 விக்கெட்டுகளால் வென்றது. இப்போட்டியின் வெற்றியின் பின் கருத்துத் தெரிவித்த டில்சான், நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற்றோம். சிறிய அணி என்றாலும் ஸ்கொட்லாந்து அணி சிறப்பான அணிதான் என்றார்.

# சென்னையில் உலக சம்பியன்ஷிப் செஸ் ஜெயலலிதாவிற்கு நன்றி கூறும் ஆனந்த்

(சென்னை)

சென்னையில் இந்த போட்டியை நடத்த முடிவு செய்த முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் விளையாடுவதை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இது நிச்சயம் அற்புதமான ஒரு அனுபவமாக இருக்கும் என விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்தார்.

சென்னையில் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி நடப்பது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே விஸ்வநாதன் ஆனந்த் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச செஸ் சம்மேளனம் போட்டிக்கான திகதி மற்றும் மோதல் நேரத்தை அறிவித்ததுடன் எனது திட்டம் மற்றும் வியூகங்களை தொடங்கி விடுவேன். உலக சம்பியன்ஷிப் போட்டியை சென்னையில் விளையாடப்போவது உண்மையிலேயே த்ரிலிங்காக இருக்கும். கடினமான இந்த போட்டிக்கு நான் ரொம்ப அதிகமாக உழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இங்கிலாந்துடனான டெஸ்டில் ஆபத்தானவர் டெண்டுல்கர்

(லண்டன்)

டெஸ்ட் போட்டி தொடரில் இங்கிலாந்து அணிக்கு டெண்டுல்கர் அச்சுறுத்தலாக இருப்பார் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர்களான மைக்கேல் வோகன், நாசர் உசேன், மைக் ஆதர்டன், கிரகாம் கூச் ஆகியோர் எச்சரிக்கை விடுத் துள்ளனர். மைக்கேல் வோகன்: கடந்த 2 ஆண்டுகளாக டெண்டுல்கர் மிக வும் ஆக்ரோஷமாக ஆடுகிறார். முன்பு போல் ஓட்டம் குவிக்க முயலும் அவர் விக்கெட்டை காத்துக் கொள்வதிலும் தீவிரம் காட்டுகிறார். 2007ஆம் ஆண்டில் டிரிம்லெட் டெண்டுல்கருக்கு எதிராக சிறப்பாக பந்து வீசினார். டிரிம்லெட் முன்பை விட தற்போது சிறந்த நிலையில் உள்ளார். ஆனால் டெண்டுல்கரிடம் எந்தவித பலவீனமும் இல்லை. அவரது விக்கெட்டை வீழ்த்துவதில் இங்கிலாந்து வீரர்கள் ஆக்ரோஷம் காட்ட வேண்டும். கடந்த 2 வருடங்களாக அவரை வீழ்த்த எடுக்கும் முயற்சிகள் எளிதில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

நாசர் உசேன்: டெண்டுல்கரின் ஆட்ட நுணுக்கத்திலும், மனதளவிலும் கடந்த சில வருடங்களாக பெரிய அளவில் மாற்றம் இல்லை. ஆனால் அவரது ஆட்ட திட்டத்தில் மாறுதல் செய்துள்ளார். ஆரம்ப காலங்களில் அவர் அதிரடியாக அடித்து ஆடினார். சாதனைகள் படைக்க ஆரம்பித்த பிறகு அவர் ஓட்டம் குவிக்கும் இயந்திரமாகி மாறி விட்டார். விக்கெட்டை இழக்காமல் இருப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறார்.

மைக் ஆதர்டன்: டெண்டுல்கர் விக்கெட்டை விரைவில் வீழ்த்த குறிவைக்க வேண்டும். களத்தில் எளிதில் உணர்ச்சி வசப்படாத டெண்டுல்கர் எளிதில் வாய்ப்புகள் அளிக்கமாட்டார். எந்த மாதிரி ஆட வேண்டும் என்பதை சரியாக கடைபிடிக்கக் கூடியவர். அவரது ஆட்ட முறையில் பெரிய மாற்றம் எதுவும் செய்யவில்லை. அவரது ஆட்ட நுணுக்கம் மற்றும் வலிமையை எப்போதும் நம்புகிறார். அது தான் அவர் போட்டியில் தொடரு வதற்கு காரணமாகும்.

கிரகாம் கூச்: 1990இல் டெண்டுல்கர் ஆட்டத்தை யாரும் பார்த்து இருக்கமாட்டார்கள். 17 வயதிலேயே அவரிடம் சிறந்த வீரராக உருவாக கூடிய திறமை மற்றும் தகுதியை காண முடிந்தது. இளம் வயதில் அடித்து ஆடும் திறமை இருந்தாலும் களத் தில் பதற்றமின்றி செயல்படும் திறமை எல்லோருக்கும் எளிதாக அமையாது. அந்த திறமை டெண்டுல்கரிடம் இளம் வயதிலேயே அமைந்து இருந்தது.

# ஆஷஸ் தொடருக்கு இணையான இந்தியாவுடனான டெஸ்ட் போட்டி

(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஆஷஸ் போட்டிக்கு இணையானது என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ரோஸ் தெரிவித்தார். இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடர் ஆஷஸ் தொடருக்கு நிகரானது. ஆஷஸ் எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு இதுவும் முக்கியமானது. சொந்த மண்ணில் விளையாடுவது நிச்சயம் எங்களுக்குச் சாதகமான அம்சமாக இருக்கும். சொந்த மண்ணில் எந்த ஒரு அணியையும் தோற்கடிக்க முடியும் என்று நம்புகிறோம். ஆனால் இந்திய அணியும் கடந்த 2 ஆண்டுகளாக அபாரமாக விளையாடி வருகிறது. இதனால் அவர்கள் எந்த அளவுக்கு நம்பிக்கையுடன் இருப்பார்கள் என்பதை அறிவோம். இந்திய அணி நிறைய சிறந்த வீரர்களைப் பெற்றிருக்கிறது. வெற்றி பெறுவதற்கு அவர்கள் பலமாக ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்வதேச கிரிக்கெட்டில் எப்போதும் இது போன்ற சவால் அவசியம். 2007ஆம் ஆண்டு (அப்போது இந்தியா 1-0 என்ற கணக்கில் வென்றது) இந்தியாவுக்கு எதிராக ஆடியதை விட இப்போது எழுச்சி மிக்க அணியாக இருக்கிறோம் என்று நினைக்கிறேன். சமீப காலங்களில் நாங்கள் நிறைய வெற்றிகளை பெற்றிருக்கிறோம். திறமை மிக்க அணியாக விளங்கி வருகிறோம். கடந்த இரு ஆண்டுகளாக ஒவ்வொரு தொடரிலும் முன்னேற்றம் கண்டு வருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.



# நியூஸிலாந்தை குடியேற்ற நாடாக தெரிவு செய்துள்ள இலங்கைத் தமிழர்கள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து குடியேற்றவாசிகளாகச் செல்லும் தமிழர்கள் தற்போது நியூசிலாந்தை தமது குடியேற்ற நாடாகத் தெரிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ.எவ்.பி செய்திச் சேவையின் பிரதானியான சிரேஷ்ட ஊடகவியலாளரும், 'பிரங்' பத்திரிகையின் தலைவருமான அமால் ஜயசிங்க நியூசிலாந்து வானொலிச்சேவை ஒன்றிற்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 84 பேரை இந்தோனேசியக் கடலில் வைத்து கைது செய்யப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் ஜயசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரித்தானியா உட்பட மேற்குலக நாடுகள் மற்றும் அவுஸ்ரேலிய அதிகாரிகளினால் அத்துமீறி நாட்டினுள் நுழைபவர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களின் நியூசிலாந்தை நோக்கிய பயணம் மிக வேகமாக அதிகரித்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் சிலர் உண்மையில் இலங்கையில் சித்திரவதைகளுக்கு உட்பட சந்தர்ப்பங்கள் உள்ள போதும் இன்று பலர் பொருளாதார நலன் கருதியே இவ்வாறு வேறு நாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்படுகின்றனர்.

ஆயினும் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் இன்று பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு 1,15,000ஆயிரம் சம்பளம் வழங்க இணக்கம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு 1,15,000 ரூபா சம்பளம் வழங்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும், இதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்கங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்திய போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயரட்ன தெரிவித்தார்.

எனினும், இதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்கங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ளவில்லை. சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இதனால் தொடர்ச்சியாக தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு மட்டுமே இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வுகள் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை எனவும் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் நிர்மால் ரஞ்சித் தெரிவித்தார்.

சம்பள உயர்வு தவிர்ந்த ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்தப் பிரச்சினை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை பொருளாதார காரணிகள் பாதிக்கக் கூடும்

## - எச்சரிக்கிறார் அமைச்சர் குணசேகர



(கொழும்பு)

பொருளாதாரக் காரணிகள் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கக் கூடும் என சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாட்டில் நிலவி வரும் வேலையற்றோர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு உரிய தீர்வு காணப்படாவிட்டால் அரேபிய நாடுகளில் தற்போது நிலவி வரும் அரசியல் குழப்பங்களைப் போன்று இலங்கையிலும் ஏற்படுவதனை தடுக்க முடியாது.

பொருளாதாரக் காரணிகளை முதனிலைப்படுத்தியே ஜனநாயக மற்றும் அதிகார வர்க்கத்திற்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கின்றன. வேலையில்லாப் பிரச்சினை குறித்து உரியகவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுகளை வழங்கத் தவறினால் பாரிய பின்விளைவுகள் ஏற்படக் கூடும்

இளம் சமுதாயத்தினரிடையே வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளதாகவும் உலக நாடுகளில் ஏற்படும் கிளர்ச்சிகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதன் மூலம் பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## வேலை வாய்ப்புக்காக சென்றவர்களில் 262பேரின் சடலங்கள் வந்துள்ளன

(கொழும்பு)

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக சென்று பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 262 இலங்கையர்களின் உடல்கள் கடந்த வருடம் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.இது தவிர கடந்த ஆண்டில் வெளிநாடுகளில் உயிரிழந்த 58 பேரின் உடல்கள் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டார். இயற்கைக் காரணங்கள், வாகன விபத்துக்கள், தற்கொலை, கொலை மற்றும் ஏனைய காரணங்களால் இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

# விரைவில் அமைச்சரவை மாற்றம் சம்பிக்கவின் பதவி பறிபோகலாம்

## - என்கிறது கொழும்பு ஊடகம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விரைவில் அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதன்போது ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான சக்தி, மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பதவி பறிக்கப்படலாம் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது பெற்றோலியத்துறை, விவசாயம், கல்வி, உயர்கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சுக்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னர் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த சி.பி.ரத்நாயக்கவுக்கு, மீளவும் அந்தப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகவும், அதுபோலவே முன்னர் கல்வி அமைச்சர் பொறுப்பை வகித்த சுசில் பிறேம் ஜெயந்தவுக்கும் அதே பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,மகிந்த ராஜபக்சவின் உறவினருமான ஹேமல் குணசேகர, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லொகான் ரத்வத்தை, ஹம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னான்டோ புள்ளே மற்றும் துமிந்த சில்வா ஆகியோர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது

# முன்னாள் இராணுவத்தளபதி பொன்சேகாவிற்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது

## - சிறைச்சாலை அதிகாரி தகவல்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு பொதுமன்னிப்பு வழங்கப்படக் கூடிய சாத்தியம் கிடையாது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு பொதுமன்னிப்போ, தண்டனைச் சலுகைகளோ வழங்கப்படக் கூடிய சாத்தியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என அவர் அறிவித்துள்ளார்.

பொதுமன்னிப்பு வழங்கப்படக் கூடிய பிரிவுகளின் கீழ் சரத் பொன்சேகாவிற்கு தண்டனை விதிக்கப்படவில்லை. இராணுவ நீதிமன்றம் தண்டனை விதிப்பதற்கு முன்னர், சரத் பொன்சேகா தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த காலம், தண்டனைக் காலத்துடன் இணைக்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## தலைமைத்துவ பயிற்சி தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சித் திட்டம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணையை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய உயர்கல்வி அமைச்சின் செயலாளரிடம் இருந்து இது தொடர்பான விடயங்கள் பதிவுசெய்யப்பட்டதாக அதன் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்கால கல்விச் செயற்பாடுகளுக்கு இந்தத் தலைமைத்துவ பயிற்சித்திட்டம் கட்டாயமானதல்ல என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் இதன் போது கூறியுள்ளார். அத்துடன் இந்தக் கலந்துரையாடலின் போது தலைமைத்துவப் பயிற்சியில் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாடநெறிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# சிறுமிகள் கருத்தரிப்பதைத் தடுக்க விசேட நடவழக்கை முன்னெடுப்பு

## - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுமிகள் கருத்தரிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முன்னெடுத்துள்ளது.

இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதற்கான காரணத்தைக் கண்டறியும் வகையில் நாட்டின் சில பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் ஆய்வொன்றை நடத்தவும் அதிகாரசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சிறுமிகள் கருத்தரித்துள்ளமை தொடர்பில் அநுராதபுரம், பொலனறுவை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸநாயக்க குறிப்பிட்டார்.

இதன்பிரகாரம் முதற்கட்ட நடவடிக்கையாக பொலனறுவை மாவட்டத்தில் ஆய்வுகளை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிறுமிகள் பல்வேறு காரணங்களுக்கு அமைய கருத்தரிக்கின்றமையால் அதற்கான காரணத்தைக்கண்டறியும் நோக்கிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறுமிகள் கருத்தரிப்பதைத் தடுக்கும் வகையில் இந்த ஆய்வு நடவக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது


## 50சதத்தால் குறைகிறது தொலைபேசிக் கட்டணம்

(கொழும்பு)


கையடக்கத் தொலைபேசி அழைப்புக் கட்டணத்தை இரண்டு ரூபாவிலிருந்து ஒரு ரூபா ஐம்பது சதம் வரை குறைப்பதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு நேற்று முன்தினம் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ்பெல்பிட்ட குறிப்பிட்டார்.இதன் பிரகாரம் குறைந்த பட்சக் கட்டணத்தை மேலும் குறைப்பதற்கு எண்ணியுள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு அதற்கான அனுமதி உரித்தாவதாக அவர் கூறினார். எனினும் புதிய கட்டணங்களுக்கு அனுமதி வழங்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட தொலைத தொடர்பு நிறுவனங்கள் ஒரு நிமிட அழைப்பிற்கான தங்கள் செலவினம் ஒரு ரூபா ஐம்பது சதத்தை விட குறைவானது என்பதை உறுதி செய்யவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வினோத விளையாட்டுக்கள்


### ஓடுவோம் பாய்வோம்




### கண்களை கட்டிக்கொண்டு துரத்திச் செல்வோம்




### பொறியிலிருந்து தப்புவோம்



### அஞ்சல் ஓடுவோம்




### கைக்கதிரையில் செல்வோம்





### ஐந்து கால்களால் ஓடுவோம்





### மீன்வலை விரிப்போம்




### நண்பனைக் காப்பாற்றுவோம்




### நண்பனைப் பிடிப்போம்




### கயிற்றில் மேலாகப் பாய்தல் (தாம்புக்கயிறு)




### கம்பத்தைப் பந்தினால் தாக்குவோம்




### பந்தினால் தாக்குவோம்




### பந்தை அனுப்புவோம்



### பந்தை சமநிலையாகக் கொண்டு செல்வோம்



### கைகளை பிடித்தவாறு ஓடுவோம் - பாய்வோம்





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்


# கல்வி முரசு

வெளியீடு 22



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 19. | சு . பா ல சு ப் பி ர ம ணி ய ம் |
| 2. | 2 | 20. | 1 2 0 1 7 1 |
| 3. | 2 | 21. |  |
| 4. | 3 | 22. | 2 |
| 5. | 2 | 23. | 3 |
| 6. | 2 | 24. | 3 |
| 7. | 1 | 25. | 2 |
| 8. | 3 | 26. | 2 |
| 9. | 2 | 27. | 1 |
| 10. | 3 | 28. | 2 |
| 11. | 3 | 29. | 3 |
| 12. | 2 | 30. | 2 |
| 13. | 2 | | |
| 14. | 3 | | |
| 15. | 3 | | |
| 16. | 1 | | |
| 17. | 3 | | |
| 18. | 2 | | |



## பகுதி -II

01. 1. கந்தசாமி ஆரூரன் 2. கந்தசாமி
3. இல.10, புனித சவேரியார் வீதி, யாழ்ப்பாணம்.
4. இலங்கைத் தமிழ் 5. ஆண்
6. சைவம் / இந்து 7. 1996-02-04
8. ஆசிரியர் 9. 03 / மூன்று
10. யாழ்ப்பாணம் 11. யாழ்ப்பாணம்
12. கையொப்பம்

02. 1. மாணவர் வரைந்த சித்திரங்கள் அழகானவை
2. ஆசிரியர் பாடம் கற்பித்தார்

03. செவிடன் காதில் சங்கு ஊதியது போல

04. 1. திவசம் 2. விளக்குமாறு

05. 1. காலையும் மாலையும் 2. ஊணும் உறக்கமும்
3. நடையுடை 4. சீருஞ்சிறப்பும்

06. 1. Mosquito 2. Lunch
3. Friday

07. 1. பிறந்தநாள் வாழ்த்துக்கள்
2. தயவு செய்து அமருங்கள்
3. நான் விளையாட விரும்புகின்றேன்

08. 1. சோறு சாப்பிடுங்கள்
2. இங்கே வாருங்கள் 3. காரியாலயம்

09. 1. எக்காய் / எகாய் 2. விதுஹல்பதி
3. சூரியகாந்தி

10. சூரியகாந்தி

11. 2

12. நீராகாரம், ஜீவனி முதலியவற்றை அருந்துவதோடு வைத்திய ஆலோசனையையும் பெறுதல்.

13. பாக்கும், சுண்ணாம்பும்

14. இறக்கையுள் வைத்து அணைத்துப் பாதுகாக்கும்

15. மின்மினிப் பூச்சி

16. 283

17. காலாவதி திகதி

18. மேற்கூறிய யாவும்

19. வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது

20. மடி

21. நாதஸ்வரம்

22. ரேகைச் சித்திரம்

23. மேற்சொன்ன மூன்றும்

24. சுவடுவரை சில்லு

25. 6 பேர்

26. R

27. R

28. R

29 S

30. R

31. சல்லரி

32. ஆமணக்கு

33. கீழ்காய்நெல்லி

34. கரப்பான் பூச்சி

35. வெட்டுக்கிளி

36. கும்பிடு பூச்சி


37. 1. இரண்டு 2. வட்டம்
3. கனவுரு / சதுரமுகி

38. 1. 732 2. 237

39. 1. 107 2. ரூபா 2750.00 3. 152

40. 80 சென்ரிமீற்றர்

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.




மேலேயுள்ள திறவுகோலானது பொன்னம்பலம் என்பவரின் பிள்ளைகளையும், அவர்களின் பிள்ளைகளையும் காண்பிக்கும் வம்சாவழிப்படமாகும். இதனை வாசித்து விளங்கிக்கொண்டு சரியான விடையை எழுதுக.

01. கணபதி என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

.............................................................................................................

02. பொன்னம்பலத்தின் பெண் பேரப்பிள்ளைகளின் பெயர்களை எழுதுக.

.............................................................................................................

03. ஐங்கரனின் சகோதரர்களுள் எவரும் இன்னமும் திருமணம் முடிக்கவில்லை. ஆரபி ஐங்கரனின் பிள்ளை ஆவார். கணபதியின் பிள்ளைகளில் திருமணம் செய்யாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

.............................................................................................................


04. பிரணவனின் மாமியின் பெயரை எழுதுக.

.............................................................................................................

05. ஆரபி, பிரணவனுக்கு என்ன உறவு முறை?

.............................................................................................................

06.




அருகேயுள்ள உருவில் உருளை வடிவக் குற்றிகள் எத்தனை உள்ளன?

07. பெற்றோலின் விலை லீற்றருக்கு 90 ரூபாவாக இருந்தபோது ஒருவன் 50 லீற்றர் கொண்ட 10 பரல்களில் பெற்றோல் வாங்கி வைத்தான். இப்போது பெற்றோலின் விலை லீற்றருக்குப் பதினைந்து ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பால் வியாபாரி அடையும் இலாபம் எவ்வளவு ரூபாய்?

.............................................................................................................



விளையாட்டு வீரர்களின் கழகம் ஒன்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் விளையாட விரும்பும் விளையாட்டுக்கள் தொடர்பான விபரம் கீழேயுள்ளவாறு படவரைபாக்கப்பட்டது.




01. அதிகளவு வீரர்கள் விளையாட விரும்பும் விளையாட்டு எது?

.............................................................................................................

02. கரப்பந்து விளையாட்டை விளையாட விரும்புவோர் 30 பேர் எனின், உதைபந்து விளையாட விரும்புவோர் எத்தனை பேர்?

.............................................................................................................

03. உதைபந்தை விளையாட விரும்புவோர் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையின் என்ன பின்னம்?

.............................................................................................................

04. பின்வரும் எண்வரிசையில் அடுத்து வரும் எண்ணிக்கை எழுதுக.

I. 4, 9, 16, 25 :..........................................

II. 0.2, 0.4, 0.6 :..........................................

05. பின்வரும் அளவீடுகளைக் குறியீடுகளுடன் எழுதுக.

1. 5 மீற்றர் 10 சென்ரிமீற்றர் :..........................................
2. 4 கிலோகிராம் 400 கிராம் :..........................................
3. 5 லீற்றர் 400 மில்லி லீற்றர் :..........................................

06. "வீதி ஒழுங்கை அறியாமல் வீதியில் செல்லும்போது" என்பதைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக. (உமது ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்)

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

# மிகப்பெரிய விட்டில் பூச்சி

அட்லஸ் விட்டில் பூச்சி (Attacus அட்லாஸ்) இந்தோனேசியர் மலாய் தீவு, தாய்லாந்து முழுவதும் பொதுவாக தென்கிழக்கு ஆசியா, தெற்கு சீன வெப்பமண்டல மற்றும் துணை வெப்ப மண்டல காடுகளில், காணப்படும் ஒரு பெரிய saturniid விட்டில் பூச்சி உள்ளது.

ஹாங்காங்கில் காணப்படும் இந்த மிகப்பெரிய விட்டில் பூச்சியின் உடலில் பாம்பு போல் வடிவம் காணப படுவதால் இந்த பூச்சி பாம்பு தலையை விட்டில் பூச்சி என்றழைக்கப் படுகிறது.



இந்த விட்டில் பூச்சிகள், விட்டில் புழு நிலையிலிருந்து 1 முதல் 2 வாரத்திற்குள் முழுமையான ஒரு சதுர வரை வளர்கிறது.

# பெறுமதியான வீடு



சுமார் ஆறு வருடங்களுக்கு முன் Leslie Allen-Vercoe க்கு சொந்தமான இந்த வீடுதான் பிரித்தானியாவின் மிகப்பெறுமதியான வீடாக இருக்கிறது. 103 அறைகளைக்கொண்ட இது 50 மில்லியன் பவுண் பெறுமதியானது.

இந்தப் பெறுமதிக்கு யாரும் இதை வாங்க முன்வராததால் வெறும் காட்சிப்பொருளாக மட்டுமே இருக்கிறதாம்.

இந்த வீடு வங்கி ஒன்றினால் அபகரிக்கப்படும் சூழ்நிலையும் தோன்றியுள்ளது.

# அதிக நீர் அருந்துவதால்...

அதிகமாக தண்ணீர் குடித்தால் உடலுக்கு மோசமான விளைவு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர். அதிக அளவு தண்ணீர் குடிப்பதால் சிறுநீரகப் பாதிப்பு தவிர்க்கப்படும், உடல் எடை குறையும் மற்றும் நினைவுத்திறன் அதிகரிக்கும் என கூறப்பட்டது. ஆனால் தினமும் 3 கோப்பை தண்ணீரை அருந்துவது சரியல்ல என கிளாக்சோவை மையமாக கொண்ட ஜி.பி.மார்க்ரேட் கூறுகிறார்.

தண்ணீர் குடிப்பதால் ஏற்படும் பயன்கள் குறித்து மிகைப்படுத்தப்படுகின்றன. அதிக அளவு தண்ணீர் குடிப்பது இரவு நேரத்தில் சரியல்ல என்றும் பாட்டிலில் அடைக்கப்பட்ட தண்ணீரை அடிக்கடி குடிப்பதும் சரியல்ல என்றும் அவர் கூறுகிறார்.



பிரிட்டன் தேசிய நலவாழ்வு சேவை ஆலோசனைப்படியும் ஊட்டச்சத்து நிபுணர்கள் மருத்துவர்கள் அறிவுரைப்படி யும் தினமும் 1-2 லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உடலில் கலோரிகள் அதிக அளவில் எரிக்கவும் உடல் எடை குறையவும் தண்ணீர் உதவுகிறது. நீர்ச்சத்து குறைபாடு காரணமாக தலைவலி ஏற்படுகிறது. இந்த தலைவலியை போக்குவதற்கு தண்ணீரை போதிய அளவு குடிக்க வேண்டும். சிறுநீரகத் தொற்றுக்கள் ஏற்படாமல் தடுக்க அதிக அளவு தண்ணீர் குடிப்பது நல்லது. கங்களின் தன்மையை மேம்படுத்த தண்ணீர் உதவுகிறது. தோல் வறட்சி அடையாமல் தடுக்கவும் தண்ணீர் உதவுகிறது என்றும் தண்ணீரின் பலன் குறித்த முந்தய ஆய்வுகள் கூறுகின்றன.

# செயற்கை கை



மோட்டார் இயந்திரத்தால் செயற்படுத்தப்படும் வழமையான செயற்கைக் கரத்துக்கு பதிலாக மனித மூளையால் இயங்கும் செயற்கை கரமொன்றை உருவாக்குவதில் அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

கரத்தை இழந்த ஜெஸி சுலிவன் என்பவருக்கே இந்த செயற்கை கரம் பரிட்சார்த்தமாக பொருத்தி ஆய்வு செய்யப்பட்டது.

அவருக்கு முதன்முதலாக 8 ஆண்டுகளுக்கு முன் செயற்கைக்கரம் பொருத்தப்பட்டது. அதன் பின் தொடர்ச்சியாக அக்கரம் மேம்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் இறுதிக்கட்டமாக செயற்கைக் கரத்தின் கம்பி இணைப்புக்களை அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவன் மார்புத் தசைகளுடன் விஞ்ஞானிகள் இணைத்தனர்.

இதன்போது செயற்கைக் கரமானது மூளையின் சமிக்ஞைகளை மார்புத் தசைகளின் ஊடாக பெற்று துல்லியமான அசைவுகளை வெளிப்படுத்துவது கண்டறியப்பட்டது.


இந்த ஆய்வை மேற்கொண்ட அமெரிக்க நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், செயற்கை கரங்களைக் கட்டுப்படுத்துவதில் வெவ்வேறு மூளைச் செயற்பாடுகள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது தொடர்பில் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.

# புற்று நோய் மருத்துவத்தில் புரட்சி!



நேக்ட் மோல் எனப்படும் எலி வகையின் மரபணுக்களைத் தொடர்ச்சியாக ஆராய்ச்சி செய்வதன் மூலம் புற்றுநோய்க்கெதிரான மருந்துக் கண்டுபிடிப்பில் புதிய புரட்சியை மேற்கொள்ள முடியுமென விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இங்கிலாந்து லிவர்பூல் பல்கலைக்கழக விஞ்ஞானிகளே முதன்முறையாக இவ்வகை எலியின் முழு மரபணு வரைவினை வெளியிட்டுள்ளனர். லண்டன் குயீன்மேரி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் இணைந்தே இவ்வாய்வை மேற்கொண்டுள்ளனர்.

# ரோமத்துடன் கடல் ஆமை



அவுஸ்ரேலியாவில் உள்ள மேரி ஆற்றுப்பகுதியில் காணப்படும் இந்த கடல் ஆமை தலையில் பச்சை நிற ரோமத்துடன் காணப்படுகி றது. இந்த வினோத ஆமை நுரையீரல் மூலம் சுவாசிக்க கூடியதாகும்.

ஆழமற்ற நீர்ப்பகுதி தேவைப் படுவதால் குயின்ஸ்லாந்து மாநில அரசு இதற்கு என்று தனியாக ஒரு குளம் அமைக்க திட்டமிட்டுள்ளது.

# டெஸ்ரொப்பை பகிர்ந்து கொள்ள

உங்கள் டெஸ்க்டாப்பின் தோற்றம் அழகாக இருப்பதை நீங்கள் மட்டும் பார்த்து ரசித்துக். கொண்டிருந்தால் போதுமா?அதை உலகோடு பகிர்ந்து கொள்ள முடிந்தால் எப்படி இருக்கும்?

டெஸ்க்டாப்.லே சேவை இதைத் தான் செய்கிறது.

இந்த சேவையின் மூலம் டெஸ்க்டாப் பிரியர்கள் தாங்கள் பயன்படுத்தும் ஸ்கிரின்சேவர் சித்திரத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.

இதில் உறுப்பினராவது மிகவும் சுலபம். உறுப்பினரானவுடன் ஸ்கிரின்சேவர் தோற்றத்தை பகிர்ந்து கொள்ளலாம். மற்றவர்கள் அதனை பார்த்து கருத்து தெரிவிக்கலாம். பிரதானமாக அயஉ கம்ப்யூட்டருக்கான சேவை என்றாலும் லேப்டாப்.டெஸ்க்டாப் என எல்லாவற்றிலிருந்தும் பகிர்ந்து கொள்ளலாம்.

உறுப்பினர்கள் தங்களுக்கான சுருக்கமான அறிமுகத்தையும் உருவாக்கி கொள்ளலாம்.

ஸ்கிரீன்சேவை தோற்றங்களை பகிர்ந்து கொள்வதோடு புதிய ஸ்கிரின்சேவர் தோற்றங்களையும் சுலபமாக அறிமுகம் செய்து கொள்ளலாம்.

ஸ்கிரின்சேவர் சித்திரங்கள் அழகின் அடையாளம் மட்டும் அல்ல.ஒருவிதத்தில் அவை அதனை பயன்படுத்துபவர்களின் தனிப்பட்ட குணாதிசயத்தை பிரதிபலிக்க கூடியவை.எனவே இந்த சேவை மூலம் புதுமையான ஸ்கிரின்சேவரை மட்டும் அல்ல அவற்றின் பின்னே உள்ள நபர்களையும் அறிமுகம் செய்து கொள்ளலாம்.

எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளும் காலம் இது.டெஸ்க்டாப் சித்திரத்தையும் பகிர ஒரு சேவை இருப்பது பொருத்தமானது தானே.

http://desktop.ly/

கணினி மூலை

இந்தியச் செய்திகள்

# மும்பையில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல்

# இந்திய, பாகிஸ்தான் பேச்சைக் குழப்ப சதி

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் சிதம்பரம்

(மும்பை)

மும்பைத் தாக்குதல் தொடர்பாக நம்பகமான உளவுத் தகவல் எதுவும் வரவில்லை என்பதை ஒப்புக் கொண்ட உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், இந்த குண்டு வெடிப்புகளின் பின்னணியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பேச்சு வார்த்தையை சீர்குலைக்கச் செய்யும் முயற்சியும் இருக்கலாம் என்றார்.

குண்டுவெடிப்பு சம்பவங்களுக்காக பொதுமக்களிடம் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்த சிதம்பரம், இந்தியாவில் இது போன்ற தாக்குதல்களை நடத்தக்கூடிய தகுதி உள்ள அனைத்து பயங்கரவாதக் குழுக்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது -

இந்த தாக்குதல் குறித்து குறிப்பிடத் தகுந்த உளவுத் தகவல் எதுவும் வரவில்லை. அதுபோன்று தகவல்கள் வந்தபோதெல்லாம் அதை அந்தந்த மாநிலங்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளோம்.

இந்தியாவில் உள்ள வெளிநாட்டவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்படவில்லை. இந்தியாவின் ஒருமைப்பாட்டையும், செழிப்பையும் சீர்குலைக்கும் நோக்கத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புணே குண்டுவெடிப்புக்கும், மும்பை குண்டுவெடிப்புக்கும் தொடர்பு உள்ளதா என்பது விசாரணையில் தெரியவரும். தாதரில் ஒரு பஸ் நிலையத்திலும், ஓபராஹவுஸில் சாலையிலும், ஜாவேரி பஜாரில் சாலை ஓரத்திலும் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் குழுதான் குண்டுவெடிப்பை நடத்தியிருக்கும் என்று முன்கூட்டியே தீர்மானித்து அதன்படி விசாரணை நடத்தப்படமாட்டாது. அனைத்து பயங்கரவாதக் குழுக்கள் குறித்தும் விசாரிக்கப்படும்.



உளவுத்தகவல்களை பகிர்ந்துகொள்வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தினமும் உளவுத்தகவல்களை சேகரித்து அதன் மீது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதல்கள் குறித்து உளவுத்துறை முன்கூட்டியே எச்சரிக்கவில்லை. எனினும் இதை உளவுத்துறையின் தோல்வி என்று கூறமுடியாது என ப.சிதம்பரம் தெரிவித்தார்.

## ஜெயலலிதாவுக்கு உத்தரவு

(பெங்களூர்)

சொத்துக்குவிப்பு வழக்கில் ஆஜராக பெங்களூர் தனி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 1995 முதல் 96 வரை முதல்வராக இருந்தபோது வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்த வழக்கில் வரும் 27 ஆம் திகதி தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் திரைப்படமாகிறது தமிழில்

## நீரா ராடியாவாக லட்சுமிராய்

(சென்னை)

உலகையே உற்றுப்பார்க்க வைத்திருக்கும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் சினிமாவாக உருவாகப் போகிறது. இதில் அரசியல் தரகர் நீரா ராடியாவாக நடிகை லட்சுமிராய் நடிக்கவுள்ளார்.

பொதுவாக இது போன்ற பரபரப்பான சம்பவங்கள் இந்தியில்தான் சினிமாவாக உருவாகும். 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தமிழ் தலைகள் பல உருண்டு கொண்டிருப்பதாலோ என்னவோ... தமிழ் சினிமா முந்திக்கொண்டது.

இயக்குநர் ஜான் மனோகர் என்பவர் இயக்கும் இப்படத்துக்கு, "2ஜி ஸ்பெக்ட்ரம்" என்றே பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஈரோடு ரவிச்சந்திரன் தயாரிக்கிறார்.

"2ஜி ஸ்பெக்ட்ரம்" படம் குறித்து இயக்குநர் ஜான் மனோகர் அளித்துள்ள பேட்டியில், நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தை மையப்படுத்தி, நடந்த நிகழ்வுகள், அதன் பின்னணி போன்றவற்றை முழுமையாக சொல்ல இந்தப் படத்தை



உருவாக்குகிறோம்.

லட்சுமி ராய், புதுமுகம் சாந்தினி, ரியாஸ்கான் உள்ளிட்டோர் நடிக்கிறார்கள். படத்தில் லட்சுமிராய்க்கு முக்கியமான வேடம். அவர்தான் நீரா ராடியா வேடத்தில் நடிக்கப் போகிறார். ஏனைய வேடங்களில் யார் யாரை நடிக்க வைப்பது என்பது பற்றி யோசித்து வருகிறோம். விரைவில் நட்சத்திர பட்டியல் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் விவரங்கள் வெளியிடப்படும் என்று கூறியுள்ளார்.

# நீதிமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானியுங்கள்

## ராஜாவுக்கு சைனி அறிவுறுத்து

(புதுடில்லி)

நீதிமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனியுங்கள் என, முன்னாள் அமைச்சர் ராஜா உள்ளிட்டோருக்கு, சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி சைனி அறிவுறுத்தினார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்த விசாரணை, டில்லியில் சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றில் நடக்கிறது. நீதிபதி ஓ.பி.சைனி வழக்கை விசாரித்து வருகிறார்.


நேற்று முன்தினம் நடந்த விசாரணையின் போது, தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ராஜா, ஸ்வான் டெலிகாம் நிறுவனத்தைச் சேர்ந்த ஷாகித் உஸ்மான் பல்வா, பொலிவுட் திரைப்பட இயக்குனர் கரீம் மொரானி உள்ளிட்டோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்றத்துக்கு வந்தவர்கள் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்ததால், அவர்களை முன்னால் வந்து உட்காரச் சொன்னார் நீதிபதி. முன் இருக்கையில் அமர்ந்தால் நான் என்ன சொல்கிறேன், உங்கள் வழக் கறிஞர் என்ன வாதாடுகிறார் என்பதெல்லாம் உங்களுக்கு புரியும்.

பின்னால் உட்கார்ந்தால் நீதிமன்றில் என்ன நடக்கிறது என்பது தெரியாது. நீதிமன்று நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்தால், உங்கள் வழக்கறிஞர் ஏதாவது தவறு செய்தால் கூட சுட்டிக் காட்ட முடியும் என்றார் நீதிபதி சைனி. இதற்கு பதிலளித்த ஷாகித் உஸ்மான் பல்வாவின் வழக்கறிஞர் விஜய் அகர்வால் குறிப்பிடுகையில்,

நீதிமன்றம் வந்துள்ளவர் ராஜா (அரசர்), நாங்கள் எல்லாம் குடிமக்கள். ராஜா சட்ட வல்லுனர். அவரிடமிருந்து நாங்கள் நிறைய கற்றுக்கொள்கிறோம்" என்றார். இதைக் கேட்டதும் அங்கிருந்தோர் உரக்க சிரித்தனர்.

வழக்கை கவனிக்க வந்தவர்கள் பேசிக்கொண்டே இருக்கக் கூடாது" என, நீதிபதி சைனி இடைமறித்து, மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளை கவனிக்கும்படி அறிவுறுத்தினார்.



சிறிகோத்தாவில் இருந்து விண்ணில் செலுத்துவதற்காகத் தயார் நிலையில் உள்ள பி.எஸ்.எல்.வி.சி -17 ரக ஏவுகணையைக் காணலாம்.

# மும்பை குண்டுவெடிப்பு எதிரொலி

# சென்னையில் பாதுகாப்பு அதிகரிப்பு

(சென்னை)

மும்பை தொடர்குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து சென்னை முழுவதும் பாதுகாப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது. மும்பையில் 3 இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து 20 பேர் உடல் சிதறிப் பலியாகியதுடன், 100க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. அனைத்து மாநிலங்களிலும் உஷார் நடவடிக்கைகளை எடுக்கும்படி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் பொலிசாரை உஷார்படுத்த டிஜிபி.ராமானுஜம் உத்தர விட்டார். இதன் பேரில் வாகன சோதனைகளும், ரோந்துப்பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையிலும் முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த பொலிஸ் அதிகாரி உத்தர விட்டார். மத்திய ரயில் நிலையம் உட்பட அனைத்து முக்கியமான ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் நேற்று முன்தினம் இரவு முதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சோதனைகள் நடத்தப்பட்டன

சந்தேக நபர்கள் நடமாடினால் பொலிஸுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சென்னை யில் தங்கும் விடுதிகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## லோக்பால் விசாரணைக்குள் பிரதமரை கொண்டுவரக்கூடாது

(புவனேஸ்வர்,)

லோக்பால் விசாரணை வரம்புக்குள் பிரதமரை கொண்டுவரக்கூடாது என காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காநதி கூறினார். புவனேஸ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டையும், அரசையும் வழிநடத்தும் நிலையில் உள்ள பிரதமரை, பதவியில் இருந்து விலகிய பின்னர்தான் லோக்பால் வரம்புக்குள் கொண்டுவர வேண்டும். பதவியில் இருக்கும்போது லோக்பால் வரம்புக்குள் பிரதமரைக் கொண்டுவரக்கூடாது எனக் குறிப்பிட்டார். ஊழலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனத் தெரிவித்த ராகுல், அரசியல் மற்றும் அரசியல்வாதிகளின் தகுதிகளில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவது குறித்துயோசித்துக் கொண்டிருக்கிறோம் என்றார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்க இராணுவ உதவி நிறுத்தம் முசாரப் கவலை தெரிவிக்கிறார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு அளித்து வந்த இராணுவ உதவியை அமெரிக்கா நிறுத்தியது கவலையளிப்பதாக பாகிஸ்தானிய முன்னாள் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைக்காக, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு, 3 ஆயிரத்து 600 கோடி ரூபா மதிப்பிலான இராணுவ உதவிகளை அளித்து வந்தது. இவ்வளவு உதவிகளையும் பெற்றுக்கொண்டு அல் - கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் உள்ளிட்டவர்களுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்ததால், ஆத்திரமடைந்த அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தான் முழுமையாக ஈடுபடவில்லை, எனக்குற்றம் சாட்டி இராணுவ உதவியை நிறுத்தியுள்ளது.

இது குறித்து, பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப், நான் அதிபராக இருந்த போது, அமெரிக்காவுடன் நல்லுறவு இருந்தது. என்னுடைய தொலைபேசியை எடுத்தாலே அடுத்த முனையில் அமெரிக்காவுக்கான தொடர்பு கிடைத்து விடும். அந்த அளவுக்கு உறவு இருந்தது. தற்போது அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை நிறுத்தியுள்ளது கவலையளிக்கிறது. இந்த உதவி நிறுத்தத்தால் பாகிஸ்தான், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் பலவீனமடையும். இந்த உதவி நிறுத்தம் இருநாட்டு உறவுக்கும் ஏற்றதல்ல. ஒசாமா கொல்லப்பட்டது முதலே இருநாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டு விட்டது. இந்த விடயத்தில் பாகிஸ்தான், அமெரிக்காவை சமாதானப் படுத்த வேண்டும். என்றார்.

# ரம்ழான் மாதத்தில் தாக்குதல் நடத்தினால் எமது விமானங்களும் பதிலடி கொடுக்கும்

## - கடாபியை எச்சரிக்கிறது நேட்டோ

(பிரஸ்சல்ஸ்)

ரம்ழான் புனித மாதத்தில், கிளர்ச்சியாளர்கள் மீது, லிபிய தலைவர் கடாபியின் படைகள் தாக்குதல் நடத்தினால், தமது விமானங்களும் தாக்குதலைத் தொடரும் என, நேட்டோ படையினர் அறிவித்துள்ளனர்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்சல்சில், நேட்டோ செய்தி தொடர்பாளரும், படைத் தளபதியுமான மைக் பிரேக்கன் இதுதொடர்பாக தெரிவிக்கையில் ஆகஸ்ட்மாதம் மாதம் முதலாம்திகதி தொடங்கும் ரம்ழான் புனித மாதத்தை முன்னிட்டு, தாக்குதலை, லிபிய தலைவர் கடாபி நிறுத்துகிறாரர் இல்லையா, என்று நேட்டோ படைகள் கண்காணிக்கும். கடாபியின் படைகள் தாக்குதலை நிறுத்தாவிட்டால், தொடர்ந்து நேட்டோ படைகளும் தாக்குதலை மேற்கொள்ளும், என்றார்.

லிபிய மக்களைப்காப்பாற்றும் வகையில், ஐ.நா. உத்தரவின் பேரில், அந்நாட்டின் மீது நேட்டோ படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், ரம்ழான் நோன்பின் போது, தாக்குதல் மேற்கொண்டால், முஸ்லிம்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று நேட்டோ படைகள் கருதுவதால், இதுதொடர்பான எச்சரிக்கையை, முன்பே கடாபி அரசுக்கு விடுத்துள்ளது. இதேவேளை துருக்கி, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன், கடாபியின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# அப்பாவி மக்கள் பலியாகக் காரணம் எகிப்தில் 700 பொலிசார் பதவி நீக்கம்

(கெய்ரோ)

எகிப்து கலவரத்தின் போது அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு காரணமாக இருந்த 700 பொலிஸ் உயரதிகாரிகள் நேற்று முன்தினம் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். எகிப்தில் அதிபர் முபாரக்கின் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் நேற்று, முன்தினம் புதிய அரசியலமைப்பு வரையறுக்கப்பட்டது. இதற்கு வழிகாட்டியாக 100 பேர் கொண்ட அரசியல் நிர்ணய சபை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.எகிப்தில் வரும் ஒக்டோபர் மாதம் பொதுத்தேர்தல் நடக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் அதிபர் முபாரக்கிற்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். அப்போது ஏற்பட்ட வன்முறையில் 800 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

தக்ரிர் சதுக்கத்தில் நடந்த வன்முறையில் தான் அதிகம் பேர் கொல்லப்பட்டனர். அப்போது பணியாற்றிய உயர் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் என 700 பேரே பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதிய பிரதமர் ஈசாம் ஷெராப தெரிவித்தார்.அதன்படி 505 மேஜர் ஜெனரல்கள், உள்துறை அமைச்சகத்தின் 10 பொலிசார்கள், உட்பட ஏறத்தாழ 700 பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்களில் 164 பேர் வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளனர்.



புதிய நாடாக உதயம் பெற்றுள்ள தெற்கு சூடானின் துணைஅதிபர் ரிக் மாக்கர் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான்கீ மூனை நியூயோர்க்கில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# சுருங்கிவருகிறது அல்பைன்பனிமலை நிர்வழிபோக்குவரத்து பாதிக்கப்படும் அபாயம்

அல்பைன் பனிமலை சுருங்கி வருகிறது என்று சுவிஸ் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.இந்த பனிமலை சுருங்கி வருவதால் ஐரோப்பாவின் பெரும் நதிகளுக்கு தண்ணீர் வருவதில் தட்டுப்பபாடு ஏற்படும். இந்த தண்ணீர் குறைவு காரணமாக நீர் வழி போக்குவரத்து முதல் மின் உற்பத்தி வரையிலான பொருளாதாரம் பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது. எனவும் அவர்கள் எச்சிரிக்கின்றனர்.

டான்பே, ரைனே, ரோனே மற்றும் போ ஆகியவை பெருமளவு தண்ணீரை பனிமலை பகுதிகளில் இருந்து பெற்றுள்ளன. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் பனிமலை வெகுவாக சுருங்கி ஐரோப்பிய நீர் ஆதாரத்தில் பிரச்சினை ஏற்படுத்தும் என்று பிரைபோர்க் பல்கலைக்கழக மண் இயல் நிபுணர் மத்தயாஸ் ஹஸ் எச்சரித்துள்ளார்.அல்பைன் பனிமலையில் இருந்து உருகி ஓடிய தண்ணீரில் 25 சதவீதம் ரோனேவில் இருந்து மத்திய தரைக்கடல் பகுதிக்குச் சென்று வீணாகி உள்ளது. பனிமலைகள் உருகுவது குறித்து சுவிஸ் அறிவியல் கழகம் புதிய அறிக்கையை தற்போது சமர்ப்பித்துள்ளது.

# பதிவிருக்கப் பெட்டகம்

தான் ஏத்துக்கிட்ட கருத்துக்கு விசுவாசமா நடக்கிறதோட யாரும் திருப்தியடையறதில்லை. தன்னால முடிஞ்சமட்டிலும் அந்த கருத்தை மத்தவங்களிடம் பிரச்சாரம் செய்கிறவங்களாகவும் ஒவ்வொருத்தரும் இருக்கிறோம். தனிமனுசனாகவோ ஒரு குழுவாகவோ ஒரு இனமாகவோ வர்க்கமாகவோ பிரிந்தும் சேர்ந்தும் இந்த பிரச்சாரம் நடக்குது. இந்த பிரச்சாரத்திற்கான கருவிகளில் ஒன்றுதான் ஊடகங்கள். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட், சினிமா, மேடை, கலை இலக்கியம் என்று ஊடகங்களோட வகைமைகள்னு விரித்து சொல்லலாம். ஏதோவொரு கருத்துக்கு ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒப்புக்கொள்ள வைக்கிறதுதான் இவையெல்லாத்துக்கும் நோக்கம். இந்த ஊடகங்கள் மக்களோட தொடர்பு வச்சிருக்கிறதே ஒரு குறிப்பிட்ட பிரச்னையில தனக்கிருக்கிற கருத்தை சமூகத்தோட பொதுக்கருத்தா மாற்றணும்கிறதுக்காகத் தான்.

**- ஆதவன் தீட்சண்யா**

ஒருவர் மக்களுடைய ஏதேனும் ஒரு எரியும் பிரச்சினையை வார்த்தைகளாக மாற்றிவிட்டால் அதன் மூலம் அந்தப் பிரச்சினைக்கோ அந்த மக்களுக்கோ என்ன நடக்கிறது என்று யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக ஈழத்துப் பிரச்சினையைப் பற்றித் தொடர்ந்து ஓவியம் வரையும் ஓர் ஓவியரின் முகத்தில் சுடர்விடும் தியாகத்தின் புனிதக் களைப்பை என்னால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடிந்ததில்லை.

**- மனுஷ்ய புத்திரன**

மீடியா மதத்திற்குப் பதிலீடாக உருவாகி வருகிறது. நவீன மனிதனுக்கு அவனுக்கு 'அப்பாலான' நடப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து அளிப்பதன் மூலம் ஒருவிதப் பாதுகாப்பு உணர்வை மீடியா ஏற்படுத்துகிறது. அன்றாட உழலுதலின் அற்பத்தனத்திலிருந்து மனிதனை விடுவித்துப் 'பேருண்மை'யுடன் தொடர்பு கொண்டுள்ள மாயையை மீடியா ஏற்படுத்துகிறது. மீடியா மதத்தைப் பதிலீடு செய்வதால்தான் அது மரணத்தைப் பற்றி பெரும் கரிசனம் கொள்கிறது. கொலை, படுகொலை, விபத்து, பேரழிவு, போர் என மரணத்தின் எல்லாப் பரிமாணங்களையும் மதத்தைப் போலவே மீடியாவும் பிரதானப்படுத்துகிறது

**- ஜோன் கரே**

செப். 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. பங்குச் சந்தையில் எல்லாப் பங்குகளின் விலைகளும் சரிந்தன. ஆயுதம் தயாரிக்கும் கம்பனிகளின் பங்குகளும் மீடியா கம்பனிகளின் பங்குகளும் மட்டும் உயர்ந்தன. சமூகத்தின் கேடுகாலம் மீடியாவின் பொற்காலம். அதேபோல சமூகத்தில் சிவில் யுத்தம், போர், மதக் கலவரம், சாதிக் கலவரம் போன்றவை இல்லாத சுபிட்சமான நிலை நிலவுமெனில் மீடியா பெரும் சரிவைச் சந்திக்கும். இலங்கையில் அமைதி உடன்படிக்கைக்குப் பிறகு நாளிதழ், இதழியல் விற்பனை கடுமையான சரிவைக் கண்டுள்ளது இதற்கு ஒரு நல்ல உதாரணம். அங்கு அமைதி நீடிப்பதில் மீடியாவின் பங்கு என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கக் கற்பனை வளம் அவசியமில்லை.

**- காலச்சுவடு கண்ணன்**

தமிழில் வெளிவருகின்ற புத்தகங்களெல்லாம், அவை வாசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே கொண்டிருப்பதாக நினைக்க வேண்டியதில்லை. சிலருக்கு, குலதெய்வத்திற்கு மொட்டை போடுவதும், காவல் தெய்வத்திற்கு தீச்சட்டி எடுப்பதும் போலத்தான் எழுதிய நூலை வெளியிட்டு விழா வைப்பதும் ஒரு சடங்கு சார்ந்த நிகழ்ச்சி. இன்னும் சிலருக்கு பணி உயர்வுக்கு உதவும் கூடுதல் சான்றிதழ். வேறு சிலருக்கு வாரிசுகள் தொழில்கல்வி பெற உதவும் கூடுதல் மதிப்பெண்கள்' இதுபோன்ற பல காரணங்களாலும் தமிழன்னை அணிகலன்கள் பல பூண்டு ஆனந்த நர்த்தனம் புரிய வழியேற்படுகிறது.

**- அ.ராமசாமி**

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் என்பது நாம் ஆதரிக்கும் கருத்துக்களுக்கான சுதந்திரம் மட்டுமல்ல. நம்மை அதிர்ச்சி அடையச் செய்யும் கருத்துக்களுக்கான சுதந்திரமும்கூட.

**- நோம் சோம்ஸ்கி**

பத்திரிகைச் சுதந்திரத்தை விடப் பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது.

**- ஒஸ்வோல்ட் ஸ்பெங்லர்**

எனது சுதந்திரம்
அரசாலோ தனிநபராலோ
பறிக்கப்படுமெனில்
அது என் சுதந்திரம் இல்லை
அவர்களின் சுதந்திரம்தான்.

**- ஆத்மாநாம்**

# கடல் நீர்த் தடுப்பணைகள் இல்லாமையால் நெல் வயல்கள் உவர் நிலங்களாக மாற்றம்

## கவலை தெரிவிக்கின்றனர் பூநகரி விவசாயிகள்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் கடற்கரைப் பிரதேசங்களை அண்டியிருக்கின்ற நிலையில் கடல்நீர்த் தடுப்பணைகள் கட்டப்படாத நிலை காணப்படுவதால் பல நூற்றுக்கணக்கான நெல் விளைச்சல் தரும் காணிகள் உவர் நிலமாக மாறியுள்ளதோடு மேலும் உவர் நிலங்களாக மாறும் அபாயம் உள்ளதாக அப்பகுதி விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

உவர்நிலங்களாக மாறி நெற்செய்கைக்கு ஒவ்வாத நிலையில் ஞானிமடம், பரமன்கிராய், செல்லையாதீவு, கிராஞ்சி, பல்லவராயன்கட்டு, கறுக்காய்த்தீவு, ஆலங்கேணி ஆகிய கிராமங்களில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் உவராக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்ச்சூழல் நிலையில் பல அணைக்கட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுறாத நிலையில் பயனற்றுப் போன தாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது இவ்வேலைகளை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மழைக்காலம் ஆரம்பமாகும் முன்னர் இவ்வேலைகளை மேற்கொண்டு நிறைவுசெய்தால் மேலும் கடல் நீர் நெற்காணிகளில் புகுந்து உவராவதைத் தடுக்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அணைக்கட்டுக்களைக் கட்டுவதோடு அதற்குரிய துருசுகள் அமைக்கப்பட்டு கதவுகள் போடப்பட வேண்டுமெனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (112, 121)

# தகவல் தொழில்நுட்பம் கிராமங்களுக்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பத்தைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்வதே தமது அமைச்சின் பிரதான நோக்கமெனத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வேலைத்திட்டத்தை கேகாலைப் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளதென அவர் குறிப்பிட்டார். இந்த நிலையை அடைவதற்கான பல இலக்குகளை ஜனாதிபதி தமது அமைச்சிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அதன் முதற்கட்ட நடவடிக்கையே தொழில்நுட்பத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதாகும் எனவும் குறிப்பிட்டார்.

# உலக விஞ்ஞான தினத்தையொட்டி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டத்தில் விஞ்ஞான சஞ்சிகையொன்று வெளிவரவுள்ளது. இந்தச் சஞ்சிகையினை யாழ்.மாவட்ட "விதாதா" வள நிலையங்களின் இணையம் வெளியிடவுள்ளது.

இச்சஞ்சிகைக்குரிய ஆக்கங்களை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், விதாதா வினை முயற்சியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்டுரைகள் நனோ தொழில்நுட்பம், புவிவெப்பமடைதல், மாற்றும் வலுச்சக்திப் பயன்பாடு, கழிவுப்பொருட்களின் மீள் சுழற்சிப் பயன்பாடு, இயற்கை அனர்த்தங்களும் அதற்கான காரணங்களும் எனும் தலைப்புக்களில் அமைதல் வேண்டும்.

கட்டுரை 1000 சொற்களிற்கு மேற்படாமல், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதப்படலாம். கட்டுரைக்குப் பொருத்தமான படங்கள் சேர்க்கப்படலாம், உசாத்துணை நூற்பட்டியல் காட்டப்படவேண்டும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுத முடியும். இதழ் குழுவால் தெரிவுசெய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே பிரசுரிக்கப்படும்.

இந்த விதிகளுக்கு அமைவாக எழுதப்பட்ட கட்டுரைகளை, தமது பெயர், முகவரி என்பவற்றுடன் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர், விதாதா வள நிலையம், இல.36, செல்லர் வீதி, நலலூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (06)


# மருத்துவமனை வசதி கோரும் அம்பலப்பெருமாள் பகுதி மக்கள்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய்-அம்பலப்பெருமாள் குளப் பிரதேசத்துக்கு மருத்துவமனை ஒன்றை அமைத்து உதவுமாறு மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கின்றனர். 1968 ஆம் ஆண்டு இக்குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதுவரை சுகாதார நிலையமோ ஏனைய மருத்துவ வசதிகளோ எதுவும் இங்கு இல்லை. தற்போது இப்பிரதேசத்திலுள்ள மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் தமது மருத்துவ தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மல்லாவி மருத்துவமனை மற்றும் அக்கராயன் மருத்துவமனை ஆகியவற்றுக்குச் சென்றே பெற்றுக்கொள்கின்றனர்.

இதேவேளை விவசாய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற இக்கிராம மக்கள் பாம்புக்கடி, காட்டு விலங்குகளினால் தாக்குண்டாலோ அடர்ந்த காட்டு வழியாக மல்லாவி அக்கராயன் மருத்துவமனைக்கே எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி கிராமத்துக்கு மருத்துவமனையை அவசியம் அமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (121)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நேற்று நடாத்திய இளைஞர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதம விருந்தினர்களையும், பாடசாலை மாணவர்களையும் காணலாம். (படங்கள்: சுமித்தி)

# கொழும்பு நகர்ப் பகுதியில் கட்டுப்படுத்த முடியாத டெங்கு

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, கொழும் நகரில் நாளொன்றுக்கு 25 பேர் வரை சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையை நாடுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

கடந்த மாதத்திற்குள் மாத்திரம் டெங்குக் காய்ச்சல் காரணமாக சுமார் 600 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவர் கூறினார். இந்த வருட ஆரம்பத்தில் கொழும்பில் பரவத் தொடங்கிய டெங்குக் காய்ச்சல் இதுவரை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியினுள் சுமார் 200 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கொழும்பு மாநகர சபையின் பிரதம அதிகாரி தெரிவித்துள்ளார்.

டெங்குக் காய்ச்சல் குறித்து மக்கள் கூடுதல் அவதானம் செலுத்தாமையே இந்த நிலைமைக்குப் பெரிதும் காரணம் கொழும்பில் அனைத்துக் கட்டடங்கள் மற்றும் காணிகளில் ஒரேயடியாக திமர் சோதனை நடத்தி முடிப்பதில் சிரமம் காணப்படுவதாக பிரதம அதிகாரி பிரதீப் காரியவசம் மேலும் கூறினார்.

# நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்திய இளைஞர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இளைஞர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கோப்பாய் இளைஞர் சேவை அலுவலர் எஸ்.சணமுகவடிவேல், யாழ்.மாநகர சபை உறுப்பினர் மங்களநேசன், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி சிவசங்கர், உளவளத் துணையாளர் க.விக்கவலிங்கம், கந்தவேள் தேசிய இளைஞர் சேவை மன்ற முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஸ்ரீமேனன் வினோதினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

"தலைமைத்துவத்தின் மனித விழுமியப் பண்புகள்" எனும் தலைப்பில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி சிவசங்கர், "என்னைத் தேடுகின்றேன்" என்னும் தலைப்பில் உளவளத் துணையாளர் க.விக்கவலிங்கம் கந்தவேள், "நாளைய உலகின் சிற்பிகள் நாமே" எனும் தலைப்பில் முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

இத்தலைமைத்துவக் கருத்தரங்கில், யாழ்வலயப் பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் கலந்துகொண்டனர். (எஸ்)

# யுத்தப் பாதிப்புக்குள்ளான வடமாகாணம் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளது

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட மாகாணம் கடந்த ஆண்டு சிறந்த பொருளாதார முன்னேற்றத்தை பிரதிபலிப்பதாக மத்திய வங்கியின் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



வட மாகாணத்தின் மொத்த உள்ளக உற்பத்தி கடந்த ஆண்டில் 22 சதவீத வளர்ச்சியை காட்டியுள்ளது.

கடந்த 2008ஆம் மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் மொத்த உள்ளக உற்பத்திகளைக் காட்டிலும், கடந்த ஆண்டு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணம் கடந்த ஆண்டில் 18 தசம் 7 சதவீத உள்ளக உற்பத்தி அதிகரிப்பை காட்டியுள்ளது. யுத்தம் நிறைவடைந்த பின்னர், வடமாகாணத்தில பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வடமாகாணம் தொடர்ச்சியான பொருளாதார அபிவிருத்தியை காட்டுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## இறை ஆசியுடன் அபிவிருத்திப் பணிகளில்...

யாழ். விஜயம் செய்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நல்லூர் ஆலயத்திற்கு சென்று சமய வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்தார்.

# யாழ்ப்பாணத்தில் வாழ்வாதார விருத்தி மிகத் துரிதமாக முன்னெடுக்கப்படுகிறது

### அமைச்சர் பசில் ராஜபக்ஷ பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் விவசாயத்துறை மீன்பிடித்துறை போன்ற தொழிற்துறைகளுடன் கல்வி சுகாதாரம் சுயதொழில் வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளும் ஜனாதிபதி அவர்களின் தலைமையின் கீழும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டலின் கீழும் விரைவாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்படுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடி பொதுச் சந்தையை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால யுத்தத்தால் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் அதிலும் யாழ்ப்பாணத்தில் மக்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்ததுடன் வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள் உள்ளிட்ட அனைத்து அரச கட்டுமானங்களும் கடும் பாதிப்புக்களைச் சந்தித்திருந்தன.

இந்த நிலையில் அவற்றை மீள் அமைக்க வேண்டிய முக்கிய பொறுப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசையே சார்ந்து நிற்கிறது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தை சிறப்பான முறையில் குறிப்பாக விவசாயம் மீன்பிடி கல்வி சுகாதாரம் சுயதொழில் உள்ளிட்ட அனைத்து வாழ்வாதார அபிவிருத்தி செயற்பாடுகளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிநடத்தலின் கீழும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் காலங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில் இவ்வாறான அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஆளும் அரசுக்கு மக்கள் முழுமையான ஆதரவுப் பலத்தை நல்கும் போது மட்டுமே அபிவிருத்தி பணிகளை மென்மேலும் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாமல் கல்வி கலாசாரம் பொருளாதாரத்தையும் சிறப்பான முறையிலும் முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் வகையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

முன்பதாக நல்லூர், கோப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மக்களுக்கான பல்வேறு அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னெடுத்துள்ளார்.

அந்த வகையில் குடிநீர் பாதை திருத்தம், மின்சாரம் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதும், அத்துடன் நீர் இறைக்கும் இயந்திரம் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகள் மலசல கூடங்களுக்கான உபகரணங்கள் கற்றல் உபகரணங்கள் கடன் திட்டங்கள் என மக்களது வாழ்வாதாரத் திட்டத்திற்கான உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, அந்தந்த பிரதேச செயலர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

### முகாமைத்துவ...

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் முதற் கட்டமாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் அதன் பின்னர் மிகுதி வெற்றிடங்கள் படிப்படியாக நிரப்பப்படுமென்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

அதேவேளை, மிகுதி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீண்டும் ஒரு முறை பரீட்சை நடத்தப்படுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### தீய சக்திகளின் சதி...

பெற்றோல் விநியோகம் ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாடு முன்நோக்கி நகர்ந்து செல்வதாகவும் அதனை தடுத்து நிறுத்த சில சக்திகள் முனைப்பு காட்டி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து சில சக்திகள் சூழ்ச்சித் திட்டங்களை தீட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த சூழ்ச்சித் திட்டங்களுக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த சில தரப்பினரும் உடந்தையாக செயற்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான சக்திகளிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## “சிட்டு” வெளிவந்தது

‘சிட்டு’ சிறுவர் சஞ்சிகை வெளியீடு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நேற்று நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வண பிதா மரிய சேவியர் அடிகளார், பொஸ்கோ நிறுவன உரிமையாளர் சந்திரகுமார், பேராசிரியர் எஸ்.சிவநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (எஸ்)

## மர அரிவு இயந்திரம் கை விரல்களை துண்டாடியது

மர அரிவு இயந்திரத்தில் கை சிக்குண்டு விரல்கள் அறுந்து தொங்கிய நிலையில் தொழிலாளி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுதுமலைப் பகுதியில் மர அரிவுப் பட்டறையில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஐ.பத்மநாதன் (வயது 42) என்பவரே அரிவு இயந்திரத்தில் கை விரல்கள் சிக்குண்டு கையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## இளநீர் பறித்தவர் விழுந்து படுகாயம்

தென்னை மரத்தில் இளநீர் பறிக்க ஏறிய பாடசாலை மாணவன் தவறுதலாக விழுந்து படுகாயங்களுக்குள்ளான சம்பவம் அக்கராயன் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் எஸ்.நவநீதன் (வயது 16) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். இம்மாணவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார். (எஸ்)

# குளத்தில் குளித்தவர் நீரில் மூழ்கி மரணம்

(வவுனியா)

நீரில் மூழ்கிக் காணாமல் போனவரை கடற்படை சுழியோடிகள் நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்டெடுத்தனர். செட்டிகுளம் பொலிஸ் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் குளத்தில் குளிக்கச் சென்று காணாமல் போன யேசுதாசன் மிராண்டா (வயது 40) என்பவரது சடலமே கண்டுபிடிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு வவுனியா பொது வைத்தியசாலைக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

### யாழ். குடா முழுவதும்...

இதன்பின்னர் ஜே.230 தந்தை செல்வாபுரத்தில் மீளக்குடியேறிய மக்களுக்காக தார் இட்டு புனரமைப்பு செய்யப்பட்ட தந்தை செல்வாபுர வீதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து வீதிப் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அத்துடன் இவ்வீதிக்கான மின் இணைப்பு வழங்குவதற்கென மின் கம்பமும் நாட்டி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட மீளக்குடியமர்ந்த பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது.

இதில் நீர் இறைக்கும் இயந்திரங்கள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், மலசலகூட உதவுபொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

‘சிப்தொர’ புலமைப்பரிசில் பெற்ற 20 மாணவர்களுக்கு பணத் தொகை வழங்கப்பட்டது. அத்துடன் வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்திற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் 600 ஆண்களுக்கு சாரங்களும், 100 பெண்களுக்கு சேலைகளும் வழங்கப்பட்டன.


இந்நிகழ்வில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலும் பல்வேறு மக்கள் நலச் செயற்திட்டங்களை மேற்படி அமைச்சர்கள் ஆரம்பித்தனர். தொடர்ந்து மாலை சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலும் பல மக்கள் நலத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சங்கானை கலாச்சார மண்டபத்தில் இதற்கான வைபவம் ஒன்று இடம்பெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். சுழிபுரம் சந்தியில் வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

### செய்திப்பாணம்

**கண்டி வீதி செல்வதற்கு கனகாலம் எம்மோடி என்பதால் வடபகுதி எம்மக்கள் - நிண்டனரா போக்குவர வுக்கதனை போதுமென அரசாங்கம் நீக்கிய்து மக்களிடர் நீங்க!**



# புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்யலாம்



## அமைச்சர் பசில் ராஜபக்ஷ அழைப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவென புலம்பெயர் தமிழர்களை வடபகுதியில் முதலீடுகளை செய்யுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அசாதாரண சூழல் நிலவியதாகவும் அது கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவென அரசாங்கம் தற்போது அங்கு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ள நிலையில் புலம்பெயர் மக்களும் வடக்கில் முதலீடுகளை செய்ய வேண்டுமென அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

# வடக்கில் சுகாதார சேவை விஸ்தரிப்பு உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 736 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யுத்தத்தால் சேதமடைந்தமையால் சகல கட்டடங்களும் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்றன. இதுவரை நோயாளர் விடுதி, வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, மருந்துக் களஞ்சியம், வைத்தியர் விடுதி, சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவற்றின் நிர்மாணத்துக்கு 225 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கட்டடப் புனரமைப்புக்கு 73 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை கட்டடப் புனரமைப்பு புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நீர்வழங்கல் வடிகால் அமைப்புக்கு இதுவரை 57 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் விடுதி, வெளிநோயாளர் பிரிவு புனரமைப்பு ஆகியவற்றுக்கு 60 மில்லியன் ரூபாவும், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் கட்டட நிர்மாணத்துக்கு 30 மில்லியன் ரூபாவும், கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் கட்டட நிர்மாணத்துக்கு இருபது மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன.

மானிப்பாய், கொடிகாமம், வேலணை, இளவாலை, கோண்டாவில், கட்டுவன் ஆகிய ஆரம்ப சுகாதார வைத்திய நிலையங்களை நிர்மாணித்துக் கொடுக்க 150 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. புங்குடுதீவு கிராமிய வைத்தியசாலை ஆண்கள் விடுதிக்கு 10 மில்லியன் ரூபாவும், அம்பன் பிரதேச வைத்தியசாலைக் கட்டடப் புனரமைப்புக்கு 15 மில்லியன் ரூபாவும், மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக் கட்டடப் புனரமைப்புக்கு 27 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

உடுவில், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளுக்காக முப்பது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் - பண்ணையில் உயிரியல் மருந்துச்சாலை கட்டட நிர்மாணம் 15 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தியடைந்துள்ளது. இவற்றைவிட பல வேலைகளின் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்காக காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## குளவி கொட்டியதால் வயோதிபப் பெண் மரணம்

(மஸ்கெலியா)

ஹட்டன்-சாமிமலை குமரித் தோட்டத்தில் குளவி கொட்டு தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் மரணமானார்.

தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவி கொட்டியதை அடுத்து மூன்று தொழிலாளிகள் மஸ்கெலிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

எனினும், இடையில் 50 வயதான பார்வதி என்பவர் மரணமானதாக மஸ்கெலிய வைத்தியசாலை தரப்பு தெரிவித்துள்ளது.

## நாடக விழா பிற்போடப்பட்டது

(வவுனியா)

வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற இருந்த கலாச்சார அமைச்சின் நாடக விழா பிற்போடப்பட்டுள்ளது

இந்த விழா 24ஆம் திகதி நடைபெறும் என வவுனியா மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது

கலாச்சார திணைக்களமும், மாவட்ட செயலகமும் இணைந்து இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர்.

## வங்கியில் பண மோசடி பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

சக பொலிஸ் உத்தியோகஸ்தரின் வங்கிக் கணக்கிலிருந்து திருட்டுத்தனமாக பணத்தை மீளப்பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள், புத்தளத்திலுள்ள வங்கியொன்றுக்குச் சென்று தான் பொலிஸ் உத்தியோகஸ்தர் எனக்கூறி, தனது வங்கிக் கணக்கிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபா பணத்தை மீளப் பெற முயற்சித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகஸ்தரின் அடையாள அட்டையை வங்கி உத்தியோகஸ்தர் கேட்டபோது அவர் அங்கிருந்து மெதுவாக நழுவிவிட்டார்.

எனினும், கண்காணிப்பு கமெராக்கள் மூலம், அந்நபரை அவதானித்த வங்கி அதிகாரிகள் இது குறித்து புத்தளம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையின் மூலம் மேற்படி நபர் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் என்பதும் குறித்த வங்கிக் கணக்கு அவருக்குரியதல்ல என்பதும் தெரிய வந்தது.

## கடவுச்சீட்டு மோசடி ஈரானியப் பிரஜை கைது

போலிக் கடவுச்சீட்டு மூலம் இத்தாலி செல்ல முயன்ற ஈரான் நாட்டு பிரஜை ஒருவரை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குற்றப்புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஈரானிய நாட்டுப் பிரஜை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து குறித்த நபரை ஜூலை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஜெய்ப்பூர் 24ஆவது ஆண்டு விழா

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி நாளை 16ஆம் திகதி சனிக்கிழமை நிகழ்வுகள் நடைபெறும். காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டிகளில் செயற்கை கால், கை அவயப் பாவனையாளர்கள் மற்றும் வேறு வகையான பாதிப்புள்ள மாற்று வலுவினர் முச்சக்கர வண்டி ஓட்டத்திலும் பங்குபற்ற முடியும்.

தொடர்ந்து காலை 9.00 மணிக்கு கலை நிகழ்வுகள் யாழ். சுன்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் இணைந்து வழங்கும் நாடகம், பயனாளிகளின் இசை நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். எனவே தங்களது திறமைகளை வெளிக்கொணர விரும்பும் மாற்று வலுவுள்ளோர்கள் இந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## நியாய விலையில்; நெல் கொள்வனவு



நாட்டில் நெல் அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச்செலவுகள் கட்டுப்பாடு தொடர்பான அமைச்சரவை உப குழுவைச் சந்தித்த போதே இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

அடுத்த அறுவடையின் போது விவசாயிகளுக்கு சிரமம் இன்றி அவர்களின் நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் இக்கூட்டத்தின்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

காய்கறி மற்றும் பழவகைகளை பாதுகாத்து வைப்பதற்கான குளிரூட்டிகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## தீயில் எரியுண்டு மரணம்

பரந்தன் சிவபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவமொன்றில் எரிகாயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் உயிரிழந்ததாக போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதே இடத்தைச் சேர்ந்த சந்திரகுமார் சரோஜாதேவி (வயது-29) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## ஆசிரியர் பற்றாக்குறை கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-அக்கராயன் மகா வித்தியாலயத்தில் சில பாடங்களை கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுவதாக அதிபர் ச.கண்ணபிரான் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம், நாடகமும் அரங்கியலும், சித்திரம், நடனம், உயர்தர வகுப்புக்குரிய தமிழ் பாடங்களைக் கற்பிப்பதற்குரிய ஆசிரியர்களுக்கே பற்றாக்குறை நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் 719 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 30 ஆசிரியர்கள் தற்போது சேவையாற்றி வருகின்றனர். ஆயினும், சில பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கே பற்றாக்குறை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)


# வேலையாட்கள் தேவை

## இயந்திர இயக்குநர்கள்

**Kord, Sord** ஆகிய அச்சு இயந்திரங்களில் வேலை செய்து முன் அனுபவம் உள்ளவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**பேப்பர் வெட்டுதல்** | **புத்தகம் கட்டுபவர்**

பேப்பர் வெட்டுவதிலும், புத்தகம் கட்டுவதிலும் முன் அனுபவம் உள்ளவர்களும், பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- மேற்படி பதவி நிலைகளில் இரவு / பகல் ஆகிய நேரங்களில் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். சிறந்த தேகாரோக்கியம் உள்ளவர்கள் விரும்பத்தக் கது.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக்கோவையுடன் எதிவரும் 18ஆம் திகதி காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள தினமுரசு காரியாலயத்துக்கு நேரடியாக வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.